THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 33 April- 2020 Issue - 4

ஆசிரியர் உரை

# பயப்படாதே சிறுமந்தையே!

சர்வ வல்ல தேவனுடைய அளவற்ற அநுக்கிரகத்தால், ஒப்பீடற்ற ராஜாவாகத் திகழ்ந்தவன் ஞானி சாலமோன். இவன் வேதாகமத்தின் பக்கங்களில் புகழ்மணம் வீசிக் கொண்டிருக்கும் தாவீது அரசனின் கடைசிப் புதல்வன். அளப்பரிய ஞானத்திற்காக அன்றைய உலகத்தால் அண்ணாந்து பார்க்கப்பட்ட இந்த ஞானியைக் கொண்டு பரிசுத்த ஆவியானவர் பகிர்ந்தருளிய நீதி மொழிகளில் ஒன்று, **ஏற்ற சமயத்தில் சொல்லப்பட்ட வார்த்தை வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்குச் சமானம்** என்பது (நீதி25:11). இவ்வசனம் சிறப்புக்குரிய ஒன்று. இதற்குக்காரணம், இதில் இடம் பெற்றுள்ள வெள்ளித்தட்டோ, பொற்பழமோ அல்ல. மாறாக, இவ்வசனத்தில் இடம் பெற்றிருக்கும் **ஏற்ற** என்னும் பதம்தான். அப்படியானால் இதற்கான விளக்கம் என்ன என்ற கேள்வி வருகிறது. அப்படித்தானே!

‘‘சரியான ஒன்று, சரியான நேரத்தில், சரியான இடத்தில், சரியான முறையில், சரியான நோக்கில், சரியான ஒருவருக்குச் சொல்லப்படுமானால், அதை நாம் **ஏற்ற** என்று சொல்லிவிட முடியும். இவ்விளக்கத்தின் அடிப்படையில், இதற்கேற்ற ஒரு மனிதனைக் கண்டுபிடிக்க முடியுமா என்பது இமாலயக் கேள்வியாகவே உள்ளது. ஏனெனில், அளந்து அளந்து அடி எடுத்து வைத்தாலும் ஏதாவது ஒரு இடத்தில் சொதப்பி விடுவது தான் மனிதனுக்கு வாடிக்கை.

இப்படி ஒட்டு மொத்த மானிடமும், **ஏற்ற** என்னும் இவ்வார்த்தைக்கு அருகதையற்றவர்களாக இருந்தாலும், பரலோகத்தின்

தேவன் **ஏற்ற** என்னும் இப்பதத்திற்கு முற்றிலும் ஏற்றவராகவே இருக்கிறார். எப்படியெனில், மனிதன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்று முடிவெடுத்து, ஏவாளை ஏற்ற துணையாக ஏதேன் தோட்டத்திலேயே கொடுத்தார். அதன் மூலம் ஆதாமுக்கு ஏவாள் **மன ரீதியாக, உடல் ரீதியாக, அறிவு ரீதியாக, ஆற்றல் ரீதியாக, உணர்வு ரீதியாக, ஆன்மா ரீதியாக** ஏற்றவளாகக் காணப்பட்டாள். இந்த தேவன், தன் தாசர்களுடைய வாழ்வில் இடைப்படும்போது, **ஏற்ற சமயங்களில் பயப்படாதே** என்று கூறி அவர்களைத் தைரியப்படுத்தியுள்ளார்.

நம் பரலோகத்தில் தேவன் இப்படி **ஏற்ற சமயங்களில்** வெளிப் படுத்தின வார்த்தைகள், இந்நாட்களில் கோவிட் – 19 ஐக் கண்டு பயத்தோடும், ஒருவித கலக்கத்தோடும் வாழ்ந்து கொண்டிருக்கும் நமக்கு மிகுந்த நம்பிக்கையைக் கொடுக்கிறதாயிருக்கிறது. ஏனெனில், இன்றைய உலகம் இனம், தேசம், மதம் என்று எந்தப் பாகுபாடும் இல்லாமல் **கொரோனா** என்னும் கொடிய தொற்று நோயால் அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறது. உலகின் அடுத்த கட்ட நகர்வு எப்படியிருக்கும் என்று எவராலும் கணிக்க முடிய வில்லை. ஆளாளுக்கு ஆருடம் சொல்லிக் கொண்டிருக் கிறார்கள். சீனா நாட்டில் தொடங்கி, பூமியின் மீதெங்கும் பரவி தன் கோரப் பிடிக்குள் உலகைக் கொண்டு வந்த கொரோனா, தன்னுடைய பிடியை ஒவ்வொரு நிமிடமும் இறுக்கிக் கொண்டே வருகிறது. சாவு எண்ணிக்கை ஆயிரங்களை அனாயசமாகக் கடந்து, இலட்சங்களை இலட்சியப்படுத்தாமல் போய்க் கொண்டிருக்கிறது.

தங்களைக் கெட்டிக்காரர்களென்றும், அவதாரப் புருஷர்கள் என்றும் எண்ணிப் பார் எங்கும் பவனி வந்த உலகத் தலைவர்கள் பேயறைந்தவர்கள் போல் காணப்பட்டு, தலைதப்பித்தால் போதும் என்று எண்ணி நான்கு சுவருக்குள் முடங்கிக் கிடக்கிறார்கள். இன்னும், தங்களை அசுர சக்தி படைத்தவர்கள் என்றும், யாராலும் அசைக்க முடியாத வல்லரசுகள் என்றும் வானம் முட்டப் பேசின சூரப்புலிகள், எத்திசையில் செல்வதென்று தெரியாமல் விழி பிதுங்கி பரிதாபமாகக் காட்சி தருகிறார்கள். முடிந்து போன இரண்டு உலகப் போர்களின் போது சீறி வந்த ஏவுகணைகளையும், குண்டு மழை பொழிந்த விமானங்களையும் கண்டு கிஞ்சித்தும் அஞ்சாத பொதுஜனம், கண்ணுக்கே புலப்படாத நுண் கிருமியைக் கண்டு குலை நடுங்கித் தலைமறைவு வாழ்க்கையைத் தாங்களாக முன்வந்து ஏற்று நடத்துகிறார்கள்.

அறிவு ஜீவிகளின் நிலை அதைவிட மோசமாக உள்ளது. சரித்திர மேதைகள் இப்படிப்பட்ட உலகம் தழுவிய பேரழிவுக்கு முன் உதாரணங்கள் உண்டா என்று கண்டுபிடிக்க சரித்திரத்தின் பக்கங்களை சத்தமில்லாமல் புரட்டிக் கொண்டிருக்கிறார்கள். மருத்துவ விஞ்ஞானத்தில் சிகரத்தை எட்டிவிட்டோம் என்று நெஞ்சை நிமிர்த்திய ஆராய்ச்சியாளர்கள், தலையைத் தொங்கப்போட்டுக் கொண்டு, யாராவது மருந்து கண்டுபிடித்து விட்டோம் என்று சொல்ல மாட்டார்களா என்று பக்கவாட்டில் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பொருளாதார வல்லுநர்கள் நாசமாகிக் கொண்டிருக்கும் பொருளாதாரத்தின் பாதிப்பு பாதாளத்தின் எந்த எல்லை மட்டும் போகும் என்பதைச் சொல்ல முடியாமல் திணறி, பட்டினிச் சாவைத் தடுத்தால் அதுவே பெரிய சாதனை என்றளவில் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இது தான் யதார்த்தம்.

இப்பஐ அச்சமும், கலக்கமும் ஒட்டு மொத்த உலகத்தை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கும் போது, உன்னதமான தேவனுடைய நாமத்தின் மீது நம்பிக்கை கொண்டு அவர் சித்தம் செய்ய ஒப்புக் கொடுத்த ஒருவன் எப்படிப்பட்ட மனநிலை கொண்டவனாக இருக்க வேண்டும்? நாமும் ஏனைய உலகத்தார் போல அச்சத்தோடும், கலக்கத்தோடும் நாட்களைக் கழிக்க வேண்டுமா? **உலகத்திலிருக்கிறவனைக் காட்டிலும் உங்களில் இருக்கிறவர் பெரியவர்** [I யோவான் 4:4] என்று வாசிக்கிறோம் தானே. அப்படியானால், நம்முடைய பார்வையும், அணுகுமுறையும் எப்படி இருக்க வேண்டும்?

அருமையானவர்களே! முதலாவது, சகலமும் சர்வ வல்லவரின் கட்டுப்பாட்டுக்குள் தான் இருக்கிறதென்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். மேசியா தீர்க்கன் என்று அழைக்கப்படும் ஏசாயா இது குறித்துப் பேசியுள்ளதைப் பாருங்கள். **நான் நினைத்திருக்கிறபடியே நடக்கும், நான் நிர்ணயித்திருக்கிறபடியே நிலை நிற்கும் என்று சேனைகளின் கர்த்தர் ஆணையிட்டுச் சொன்னார்** [ஏசா 14:24]. அது மாத்திரமல்ல, பிதாவின் சித்தமில்லாமல் எதுவும் நடப்பதில்லை [மத் 10:29] என்று இயேசு தாமே சொல்லியுள்ளார்! உண்மை நிலை இப்படியிருக்கும் போது நாம் ஏன் பயந்து கிடக்க வேண்டும்? மெய்த் தேவனை அறிந்து கொள்ளும் அறிவை உலகத்தோற்றம் முதல் தேவன் தெளிவாய் வெளிப்படுத்தியிருந்தும் அவரை அறிந்து, உணர்ந்து, ஏற்றுக் கொள்ளாமல், தங்களை ஞானிகளென்று சொல்லி பயித்தியக்காரர்களாக வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் [ரோம 1:19-22] போல நாம் ஏன் கலக்கத்தோடு காலங்களைக் கழிக்க வேண்டும்? தேவையே இல்லை.

ஒரு வேளை நாம் பயப்படுவோமானால் அது நம் விசுவாசத்தின் கூறை மழுங்கச்செய்து, தேவன் மீதான நம் நம்பிக்கையைத் தகர்த்துப் போடும். தேவனுடைய சொல்லுக்குக் கீழ்ப்படிந்து, அவர் சித்தத்துக்கு ஒப்புக் கொடுத்து வாழும் ஒருவன் தேவையில்லாத பயத்தோடும், நடுக்கத்தோடும் இருப்பதை தேவன் விரும்புவதில்லை. ஏற்ற சமயத்தில் அவர்களைச் சந்தித்து தைரியப்படுத்துகிறார். ஆம், தன் அழைப்புக்கு கீழ்ப்படிந்து வாழ்ந்த ஆபிரகாமின் வாழ்வின் ஒரு கட்டத்தில், அடுத்து என்ன நடக்குமோ என்ற நிலை வந்தபோது **ஆபிரகாமே நீ பயப்படாதே நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகாபெரிய பலனுமாயிருக்கிறேன்** என்றார் (ஆதி 15:1).

இன்னும், புதிய ஏற்பாட்டில் இரட்சகராகிய இயேசுவானவர், தான் காட்டிக் கொடுக்கப்பட்டு, கைது செய்யப்பட்டு, விசாரிக்கப்பட்டு, சிலுவையிலைறைப்படுவதை முன்னறிவித்த போது, அவரை நம்பித் தொழிலைவிட்டு, வருமானத்தை விட்டு, குடும்பத்தை விட்டு, ஊரை விட்டு வந்த சீடர்கள் பேரதிர்ச்சியில் உறைந்து போனார்கள். அப்பொழுது அவர்களின் இருதயத்தின் நினைவுகளை அறிந்து கொண்ட இயேசுவானவர், **உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள் என்றார்** (யோவான் 14:1) விசுவாசமுள்ள ஒருவன் எச்சூழலுக்கும் அஞ்சத் தேவையில்லை என்பதே அங்கே இயேசு பதிவு செய்த செய்தி. இச்செய்தி அவர்களுக்கு மட்டும் தானா?

சரி, பயப்படாதே, கலங்காதே என்று நாம் சொல்லுவோமானால், அதற்கான காரணங்கள் நமக்குத் தெரிந்திருக்க வேண்டும். அது தானே சரி, கவனிப்போம்.

## I. பயத்துக்கான காரணத்தைக் காட்டிலும் கர்த்தர் பெரியவர்

எச்சூழலிலும் தேவன் மீது நம்பிக்கை கொண்ட ஒருவன் பயப்படக் கூடாது என்பதற்கான காரணங்களின் வரிசையில் முதலாவது நாம் அறிந்து கொள்ள வேண்டியது, கர்த்தர் பெரியவர் என்பது.

பரிசுத்த வேதாகமத்தின் முதல் வசனமே **ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் படைத்தார் என்பது** (ஆதி 1:1). விண்ணுலகிலும், மண்ணுலகிலும், நீரிலுகிலுமுள்ள அனைத்தும் அவருடைய கரத்தின் கிரியைகள் தான். அவர் அதிசயங்களைச் செய்கிறவர் (சங் 72:18) அண்டசராசரங்களை மாத்திரமல்ல,

மானிடராகிய நம்மை உண்டாக்கினவரும் அவரே. தேவ மனிதர்கள் இதை உணர்ந்திருக்கிறார்கள். ஆகையால் தான் தாவீது, **தேவனாகிய கர்த்தாவே நீர் பெரியவர் என்று விளங்குகிறது. நாங்கள் எங்கள் காதுகளாலே கேட்ட சகல காரியங்களின்படியேயும் தேவரீருக்கு நிகரானவர் இல்லை; உம்மைத் தவிர வேறே தேவனும் இல்லை என்று ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தான்.** இந்த உண்மை புரியாமல் தன்னை ஒரு பொருட்டென்று எண்ணி வாழ்ந்து, தேவ வல்லமையையும் தேவச் செயலையும் அற்பமாக எண்ணியதின் விளைவாகவே இன்றைக்கு மானிடம் பரிதாபமாக நிற்கிறது.

பரலோகத்தின் தேவன் தன் ஜனமாகிய இஸ்ரவேலை ஓங்கிய புயத்தினாலும், பலத்த செய்கைகளாலும் விடுவித்து, செங்கடலை இரண்டாகப் பிளந்து அவர்களை வெட்டாந்தரையில் நடப்பது போல நடக்கப் பண்ணி தூதர்களின் உணவாகிய மன்னாவை ஆகாரமாகக் கொடுத்து, பகலில் மேக ஸ்தம்பித்தினாலும், இரவில் அக்கினி ஸ்தம்பித்தினாலும் வழி நடத்தினார். ஒரு கட்டத்தில், தேசத்தை வேவு பார்க்க அனுப்பப்பட்ட 12 பேரில் பத்துப்பேர் திரும்பி வந்து பாலும், தேனும் ஓடுகிற வளமான தேசமாக அது இருந்தாலும், அங்கே குடியிருக்கிற மனிதரின் உருவத்தைக் கண்டு பயந்து ஜனங்களுக்குள்ளே துர்ச்செய்தி பரப்பினார்கள். அப்பொழுது நூனின் குமாரனாகிய யோசுவாவும், எப்புன்னேயின் குமாரானான காலேபும் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு **கர்த்தருக்கு விரோதமாகக் கலகம் பண்ணாதிருங்கள்** அந்த தேசத்தின் ஜனங்களுக்கு நீங்கள் **பயப்பட வேண்டிய தில்லை.** கர்த்தர் நம்மோடே இருக்கிறார் அவர்களுக்கு பயப்பட வேண்டியதில்லை என்றார்கள் (எண் 14:9).

இங்கே கவனியுங்கள், கர்த்தரின் வல்லமையை மறந்து பேசுவதும், செயல்படுவதும், பயப்படுவதும் கர்த்தருக்கு விரோதமான **கலகம்** என்று சொல்லப்பட்டுள்ளது. என்றைக்காவது இது குறித்து எண்ணிப் பார்த்திருக்கிறோமா? கர்த்தருக்கு எதிரான கலக மனநிலையைக் கர்த்தர் ஒருபோதும் சகித்துக் கொள்வதில்லை. அதுமாத்திரமல்ல, அது கர்த்தருக்கு கோபத்தை கொண்டுவருகிறது. ஆம், **என் மகிமையையும் நான் எகிப்திலும் வனாந்திரத்திலும் செய்த என் அடையாளங்களையும் கண்டிருந்தும் எனக்குக் கோபம் உண்டாக்கியவர்களில் ஒருவரும் அதைக் காணமாட்டார்கள்** (எண் 14:22) என்றார். பார்வோனின் சேனையை முறியடித்து, செங்கடலைப் பிளந்து வழி நடத்தியவருக்கு அரணிப்பாள பட்டணங்களையும், இராட்சதர்களான ஏனாக்கின் குமாரரையும் மேற்கொள்வது கடினமான ஒன்றா? சொல்லுங்கள் அப்படியிருக்கும்போது எதற்காகப் பயப்பட வேண்டும்?

ஆகையால், அருமையானவர்களே! நம்முடைய பூலோக வாழ்க்கையில் நாம் பயப்படுவதற்கான காரணம் எதுவாக இருந்தாலும், உலகை மிரள வைத்துக் கொண்டிருக்கும் கொரோனவாக இருந்தாலும் நாம் பயப்படத் தேவையில்லை. **நம் கர்த்தர் மகா பெரியவர்.**

## II. நம் ஜெபத்தைக் கேட்பவர் நம்மை உண்டக்கினவர்

எச்சூழலிலும் தேவன் மீது நம்பிக்கை கொண்ட ஒருவன் பயப்படக்கூடாது என்பதற்கான காரணங்களில் இரண்டாவது, நம் ஜெபத்தைக் கேட்பவர் நம்மை உண்டாக்கினவர் என்பது.

ஜெபம் என்பது தேவனிடத்தில் ஏறெடுக்கும் மன்றாட்டு. ஜெபம் மனிதனுக்குக் கிடைத்த மாபெரும் சிலாக்கியங்களில் ஒன்று. ஜெபத்தின் மூலம் நாம் சர்வவல்வரோடு பேசுகிறோம். நம் தேவன் ஜெபத்தைக் கேட்பவர் மாத்திரமல்ல, ஜெபத்திற்குப் பதிலளிக்கிறவர் (II நாளா 7:14) அப்போஸ்தலன் பவுலடியார் பிலிப்பி பட்டணத்து சபைக்கு எழுதும்போது, நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல் எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள் என்று (பிலி 4:6) கூறியுள்ளார்.

சர்வ வல்லவரால் நாம் உருவாக்கப்பட்டிருக்கிறோம். கவிஞன் தாவீது இது குறித்துப் பாடும்போது, **நீர் உள்ளிந்திரியங்களைக் கைகொண்டிருக்கிறீர்; என் தாயின் கர்ப்பத்தில் என்னைக் காப்பாற்றினீர். பிரம்மிக்கத்தக்க அதிசயமாய் நம்மை உருவாக்கினார்** என்று பாடியுள்ளார் (சங்.139:13,14). அத்தோடு, நாம் அவருடைய குமாரானாகிய இயேசுவின் சுவிசேஷ வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்த போது **ஆவிக்குரிய ரீதியில் தேவனால் பிறப்பிக்கப்பட்டிருக்கிறாம்** (1போது 1:23). இதன் மூலம், **தேவனுடைய புத்திரர்** என்னும் சிறப்பு நிலை நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இச்சிறப்பு நிலை, நம்மை பிரமிக்கத்தக்க அதிசயமாய் உருவாக்கின தேவனை, அப்பா, **பிதாவே** என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவீகார உரிமையைத் தந்திருக்கிறது (ரோமர் 8:15).

இப்படி நம்மை சரீரத்திலும், ஆவியிலும் உருவாக்கின தேவன் தான் **ஆபத்துக் காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு** என்று சொல்லியுள்ளார் (சங் 50:15). அப்படியானால், நாம் இந்நாட்களில் நாம் கடந்து போய்க் கொண்டிருக்கிற சூழ்நிலைக்காக, மாண்டு கொண்டிருக்கிற ஏராளமான மக்களுக்காக பாரத்தோடு இயேசுவின் மூலம் தேவனைக் கூப்பிட்டுக் கொண்டுள்ளோமா?

நம் தேவன் நம் ஜெபத்தின் காரியங்களைக் கேட்பதற்கும், பதிலளிப்பதற்கும் முற்றிலும் தகுதிபடைத்தவராக இருக்கிறாரே. ஏனெனில், அவர் சொல்ல ஆகும் அவர் கட்டளையிட நிற்கும் [சங் 33:9].

அதுமாத்திரமல்ல, தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்து, தான் பூமியில் ஊழியம் செய்த நாட்களில், "..... சகல பட்டணங்களையும், கிராமங்களையும் சுற்றி நடந்து, ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்ஜியத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும், சகல நோய்களையும், நீக்கி அவர்களைச் சொஸ்தமாக்கியுள்ளார் [மத்9:35]. இங்கே பாருங்கள், **சகல வியாதிகளையும், சகல நோய்களையும்** குணமாக்கும் வல்லமை அவருக்கு உண்டு. குமாரனுடைய வல்லமையின் கீழ் அடங்காதது எதுவுமில்லை.

உண்மை நிலை இப்படியாக இருக்கும் போது, நாம் ஏன் பயப்பட வேண்டும் ? சரீரத்திலும், ஆவியிலும் நம்மைப் படைத்தவர் வல்லமையுடையவர் என்பதை ஏற்றுக்கொண்டு, ஊக்கத்தோடும், பாரத்தோடும் ஜெபித்து நம்பிக்கையோடு நாட்களைக் கழிப்போம்.

### III. சோதனையான நேரங்கள் விசுவாசத்தை செயல்பட வைக்கும்

எச்சூழலிலும் தேவன் மீது நம்பிக்கை கொண்ட ஒருவன் பயப்படக்கூடாது என்பதற்கான காரணங்களில் மூன்றாவது, சோதனையான நேரங்கள் நம் விசுவாசத்தைச் செயல்பட வைக்கும் என்பது.

இப்பூலோக வாழ்க்கையின் பல நேரங்களில், அடுத்த கட்டம் என்ன என்பது நம்மைக் கலங்கச் செய்து விடுகிறது. ஆம், பயம் நம்மை முடமாக்கிப் போடுகிறது. நான் என்ன செய்வேன். என்ன பேசுவேன், எங்கு போவேன், எப்படிச் சந்திப்பேன் என்றெல்லாம் கவலைப்பட ஆரம்பித்துவிடுகிறோம். ஆயினும், எச்சூழலிலும் நாம் விசுவாசத்தை இழக்க வேண்டியதில்லை. இது குறித்து தாவீது, தான் பெலிஸ்தர் கையில் அகப்பட்டபோது, **நான் பயப்படுகிற நாளில் உம்மை நம்புவேன்** என்று கூறியுள்ளார் [சங் 56:3]. இப்படிப்பட்ட நம்பிக்கை இருந்தபடியால்தான். **உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்து போவேன்; என் தேவனாலே ஒரு மதிலைத் தாண்டுவேன்** [சங் 18:29] என்று கூற முடிந்தது.

இதே கருத்தை அப்போஸ்தலன் பவுல் புதிய ஏற்பாட்டில் எங்ஙனம் வெளிப்படுத்தியுள்ளார் பாருங்கள். **நாங்கள் எங்கள் மேல் நம்பிக்கையிராமல், மரித்தோரை எழுப்புகிற தேவன்**

**மேல் நம்பிக்கையிருக்கத்தக்கதாக மரணம் வருமென்று நாங்கள் எங்களுக்குள்ளே நிச்சயித்திருந்தோம். அப்படிப்பட்ட மரணத்தினின்றும் அவர் எங்களை தப்பிவித்தார். இப்பொழுதும் தப்புவிக்கிறார். இன்னும் தப்புவிப்பார் என்று அவரை நம்பியிருக்கிறோம்** [II கொரி 1:9:10]. ஆகவேதான், **நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன்** [II தீமோ 1:12] என்று நம்மைப் போன்றவர்களில் செவிகளில் விழத்தக்கதாக உரக்கக் கூற முடிந்தது.

ஆயினும், பல நேரங்களில் நாம் இயேசுவின் சீடர்கள் போல நடந்து கொள்ளுகிறோம். ஒரு சமயம், இயேசுவோடு கூட அவருடைய சீடர்களும் படகில் ஏறி, கலிலேயாக் கடலில் பயணித்தார்கள். அங்கே பெருங்காற்று உண்டாகி அலைகளினால் படவு மூழ்கும் அபாயம் ஏற்பட்டது. சீடர்கள் அவரை எழுப்பி ஆண்டவரே எங்களை இரட்சியும், மடிந்து போகிறோம் என்றார்கள். அதற்கு இயேசு, **அற்ப விசுவாசிகளே** ஏன் பயப்படுகிறீர்கள் என்று கன்னத்தில் அறைவது போல் கேட்டு, காற்றையும், கடலையும் அதட்டி அமைதி ஏற்படுத்தினார் [மத்.8:23-28].

இதே சம்பவத்தை லூக்காவில் வாசிக்கும்போது **உங்கள் விசுவாசம் எங்கே?** என்று இயேசு சீடர்களைப் பார்த்துக் கேட்டுள்ளார் [லூக்கா 8:25]. அதாவது, உங்களோடு இருக்க வேண்டிய விசுவாசத்தை எங்கே தொலைத்தீர்கள் என்பதே இயேசுவின் கேள்வி. கலிலேயாக் கடல் கரையிலேயே வைத்துவிட்டீர்களா? கடலுக்குள் நங்கூரம் பாய்ச்சி இறக்கி விட்டீர்களா? அல்லது பெருங்காற்றிலே உங்கள் விசுவாசமும் அடித்துச் செல்லப்பட்டுவிட்டதா? என்ன ஆச்சு, என்னதான் ஆச்சு? என்றார். ஆம், விசுவாசத்தைத் தொலைத்து விடுவோமானால் இயேசு நம்மோடு இருந்தாலும் நம்மை பயம் விடாது. பயப்படக் கூடாததற்கெல்லாம் நாம் பயப்படுகிறவர்களாக மாறிவிடுவோம்.

ஆகையால், அருமையானவர்களே! தேவனிடத்திலும், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினிடத்திலும் விசுவாசம் வைப்போம். நாம் அவ்வப்போது தொலைத்துப்போடும் விசுவாசத்தைச் செயல்பட வைக்கும் சூழ்நிலைகளைத் தயக்கமில்லாமல் எதிர்கொண்டு நம்பிக்கையோடு செயல்படுவோம். தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக் கொடுத்தவர், அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருக்கமாட்டார். [ரோமர் 8:32]. ஆகையால் சோதனைகளை ஏற்றுக்கொள்வோம். விசுவாசத்தில் உறுதி காட்டுவோம். வெற்றி வாழ்வை இம்மையிலும், மறுமையிலும் சுதந்தரிப்போம். ஆமென்!! ✝

# புதிய பரிசேயர்களும், சதுசேயர்களும்

Bro. J.C. சோட்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, மோசேயின் பிரமாணத்தின் கீழ் வாழ்ந்து மரித்தார். அந்த கிறிஸ்து நான் நியாயப்பிரமாணத்தை அழிக்க வரவில்லை. அதை நிறைவேற்றவே வந்தேன் என்று சொன்னார் (மத்.5:17,18). ஆகவே, அவர் நியாயப்பிரமாணத்தை மற்றெந்த மனிதனையும் விட பூரணமாகக் கைக்கொண்டார். நம் இரட்சகராகிய இயேசு கிறிஸ்து இந்தப் பூமியிலே வாழ்ந்த நாட்களில் மோசேயின் பிரமாணத்தைப் பின்பற்றினவர்கள் பல்வேறுபட்ட பிரிவுகளாகப் பிரிந்திருந்தார்கள். அவைகளுள் மிகப்பிரபலமான பிரிவுகளாக சது சேயர்களும், பரிசேயர்களும் இருந்தார்கள். பரிசேயர்கள் பழமை வாதிகளாக இருந்தார்கள். மேலும், அவர்கள் உயிர்த்தெழுதல் மற்றும் தேவதூதர்களில் நம்பிக்கை வைத்தார்கள். சதுசேயர்கள் புதுமை வாதிகளாக அதாவது தாராளக் கொள்கைக்காரர்களாக இருந்தார்கள். பரிசேயர்கள் நம்பினதை இவர்கள் மறுத்தார்கள். ஆனால், இயேசு கிறிஸ்து இவ்விரு பிரிவினரையும் சார்ந்தவரல்ல.

இந்தப் பரிசேயர்களும், சதுசேயர்களும் நியாயப்பிரமாணத்தைப் பாரம்பரியமாகவும், பழக்க வழக்கங்களாகவும் மாற்றி அதைக்கெடுத்துவிட்டார்கள். அவர்கள் தேவனுடைய உபதேசங்களையும், மனுஷருடைய உபதேசங்களையும் ஒன்றாக இணைத்து தேவ சித்தத்தை அவமாக்கினார்கள். அதன் விளைவாக, கிறிஸ்து அவர்களோடு ஒத்துப் போகமுடியவில்லை. அவர்களை ஆதரிக்கவும் இல்லை. அதற்குப் பதிலாக அவர் அவர்கள் செய்த மற்றும் போதித்த காரியங்களுக்காகக் அவர்களைக் கடுமையாக கடிந்து கொண்டார்.

இப்போது நாம் இந்த பரிசேயர்கள், சதுசேயர்களோடு கிறிஸ்துவுக்கு ஏற்பட்ட அனுபவத்தையும் அவர் அவர்களைக் கடிந்து கொண்டதையும் பார்க்கலாம். அவர் இப்படிப் பேசிக் கொண்டி ருக்கையில் பரிசேயன் ஒருவன் தன்னுடனே கூட அவர் பகல் போஜனம் பண்ண வேண்டுமென்று அவரை வேண்டிக் கொண்டான். அவர் போய்ப் பந்தியிருந்தார். அவர் போஜனம் பண்ணுகிறதற்கு முன் கைகழுவாமலிருப்பதைப் பரிசேயன் கண்டு, ஆச்சரியப்பட்டான். கர்த்தர் அவனை நோக்கி பரிசேயராகிய நீங்கள் போஜனபான பாத்திரங்களின் வெளிப்புறத்தைச் சுத்தமாக்குகிறீர்கள்! உங்கள் உள்ளமோ கொள்ளையினாலும், பொல்லாப்பினாலும் நிறைந்திருக்கிறது.

மதிகேடரே, வெளிப்புறத்தை உண்டாக்கினவர் உட்புறத்தையும் உண்டாக்கவில்லையா? உங்களுக்கு உண்டானவைகளில் பிச்சைக் கொடுங்கள். அப்பொழுது சகலமும் உங்களுக்குச் சுத்தமாயிருக்கும். பரிசேயரே உங்களுக்கு ஐயோ, நீங்கள் ஒற்தலாம் மருக்கொழுந்து முதலிய சகலவித பூண்டுகளிலும் தசமபாகம் கொடுத்து நியாயத்தையும், தேவ அன்பையும் விட்டுவிடுகிறீர்கள்; இவைகளையும் செய்ய வேண்டும், அவைகளையும் விடாதிருக்க வேண்டுமே. பரிசேயரே உங்களுக்கு ஐயோ, ஜெப ஆலயங்களில் முதன்மையான ஆசனங்களையும், சந்தைகளில் வந்தனங்களையும் விரும்புகிறீர்கள். மாயக்காரராகிய வேதபாரகரே, பரிசேயரே உங்களுக்கு ஐயோ, மறைந்திருக்கிற பிரேதக் குழிகளைப் போலிருக்கிறீர்கள், அவைகள் மேல் நடக்கிற மனுஷருக்கு அவைகள் தெரியாதிருக்கிறது என்றார் (லூக்கா 11:37-44).

மேலும், மத்தேயு 23-ம் அதிகாரத்திலும் 13-ம் வசனம் தொடங்கி பரிசேயர்கள் மற்றும் வேதபாரகர்களைக் கடுமையாகச் சாடுகிறார். மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, பார்வைக்காக நீண்ட ஜெபம் பண்ணி விதவைகளின் வீடுகளைப் பட்சித்துப் போடுகிறீர்கள். இதினிமித்தம் அதிக ஆக்கினியை அடைவீர்கள். மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, ஒருவனை உங்கள் மார்க்கத்தானாக்கும்படி சமுத்திரத்தையும் பூமியையும் சுற்றித்திரிகிறீர்கள். அவன் உங்கள் மார்க்கத்தானான போது அவனை உங்களிலும் இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குகிறீர்கள் (மத்தேயு 23:13-15).

தொடர்ந்து இயேசு, அவர்களை இவ்விதமாகவும் கடிந்து கொண்டார். குருடரான வழிகாட்டிகளே, கொசுகில்லாதபடி வடிகட்டி, ஒட்டகத்தை விழுங்குகிறவர்களாயிருக்கிறீர்கள். மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, போஜன பதார்த்தங்களின் வெளிப்றத்தைச் சுத்தமாக்குகிறீர்கள்; உட்புறத்திலோ அவைகள் கொள்ளையினாலும், அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கிறது. குருடரான பரிசேயனே! போஜன பானபாத்திரங்களின் வெளிப்புறம் சுத்தமாகும்படி அவைகளின் உட்புறத்தை முதலாவது சுத்தமாக்கு. மாயக்காரராகிய வேதபாரகரரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பாயிருக்கிறீர்கள். அவைகள் புறம்பே அலங்காரமாய்க் காணப்படும், உள்ளேயோ மரித்தவர்களின் எலும்புகளினாலும், சகல அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கும். அப்படியே நீங்களும் மனுஷருக்கு நீதிமான்கள் என்று புறம்பே காணப்படுகிறீர்கள்; உள்ளத்திலோ மாயத்தினாலும், அக்கிரமத்தினாலும் நிறைந்திருக்கிறீர்கள். மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, நீங்கள் தீர்க்கதரிசிகளின் கல்லறைகளைக் கட்டி நீதிமான்களின்

சமாதிகளைச் சிங்காரித்து; எங்கள் பிதாக்களின் நாட்களில் இருந்தோமானால், அவர்களோடே நாங்கள் தீர்க்கதரிசிகளின் இரத்தப்பழிக்கு உடன்பட்டிருக்கமாட்டோம் என்கிறீர்கள். ஆகையால், தீர்க்கதரிசிகளைக் கொலை செய்தவர்களுக்குப் புத்திரராயிருக்கிறீர்கள் என்று உங்களைக் குறித்து நீங்களே சாட்சிகளாயிருக்கிறீர்கள். நீங்களும் உங்கள் பிதாக்களின் அக்கிரம அளவை நிரப்புங்கள். சர்ப்பங்களே, விரியன் பாம்பு குட்டிகளே! நரகாக்கினைக்கு எப்படித் தப்பித்துக் கொள்வீர்கள் (மத்தேயு 23:24-33).

இந்தக் காரணங்களினால் இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களைப் பார்த்து: வேதபாரகர், பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிக்ககமாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் (மத்தேயு 5:20) என்றார்.

மேலும், பரிசேயர், சதுசேயர் என்பவர்கள் வெவ்வேறு பிரிவுகளைச் சேர்ந்தவர்களாயிருந்தபடியால், அவர்களுக் கிடையே ஒருமித்த கருத்து இல்லாதிருந்தபடியால், அவர்கள் ஒருவரை யொருவர் சில காரியங்களில் எதிர்த்தார்கள். ஆனால், இயேசு கிறிஸ்துவை எதிர்ப்பதென்று வரும்போது அவர்கள் ஒன்று சேர்ந்து கொண்டார்கள். எப்படியெனில், பரிசேயரும், சதுசேயரும் அவரைச் சோதிக்கும்படி அவரிடத்தில் வந்து: வானத்திலிருந்து ஓர் அடையாளத்தைத் தங்களுக்குக் காண்பிக்க வேண்டும் என்று கேட்டார்கள் (மத்தேயு 16:1). உடனே பரிசேயர் புறப்பட்டுப் போய், அவரைக் கொலை செய்யும்படி, அவருக்கு விரோதமாய் ஏரோதியரோடே கூட ஆலோசனை பண்ணினார்கள் (மாற்கு 6:3). மேலும், அவர் சதுசேயரை வாயடைத்தார் என்று பரிசேயர் கேள்விப்பட்டு, அவரிடத்தில் கூடிவந்தார்கள். அவர்களில் நியாயசாஸ்திரி ஒருவன் அவரைச் சோதிக்கும்படி போதகரே, நியாயப் பிரமாணத்திலே எந்தக் கற்பனை பிரதானமானது என்று கேட்டான் (மத்தேயு 22:34-36).

கடைசியாக, அவர்களுடைய விடாமுயற்சியினாலும், கர்த்தருடைய சீஷர்களில் ஒருவனுடைய புத்தி பிசகினாலும் இயேசு கிறிஸ்துவை சிறைபிடித்து விசாரணைக்காக பிரதான ஆசாரியனுக்கு முன்பாகக் கொண்டு வந்த காரியத்தில் வெற்றியும் பெற்று (மத்தேயு 26:56), விடியற்காலமான போது, சகல பிரதான ஆசாரியரும் ஜனத்தின் மூப்பரும், இயேசுவைக் கொலைசெய்யும்படி அவருக்கு விரோதமாக ஆலோசனை பண்ணி, அவரைக் கட்டி, கொண்டுபோய், தேசாதிபதியாகிய பொந்தியுபிலாத்துவினிடத்தில் ஒப்புக் கொடுத்தார்கள் (மத்தேயு 27:1,2). அதன் பின்பு, கிறிஸ்து பொய்யாகக் குற்றஞ் சாட்டப்பட்டு, தவறாக விசாரிக்கப்பட்டு அதினிமித்தம் சிலுவையிலறையப்பட்டு அடக்கம் பண்ணப்பட்டார். ✝

# கோவிட் - 19 கிருமியின் சவால்கள்

## Sister. Betty Choate

**உ**லக வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத அளவில் ஏகமாய் எல்லோரையும் பாதித்திருக்கும் ஒரு வியாதியின் காரணமாக கிட்டதட்ட எல்லா நாடுகளுமே முடக்கப்பட்டுவிட்டன. லட்சக் கணக்கானோர் மரித்துப் போயிருக்கிறார்கள். அதே நேரத்தில், சில இலட்சங்களில் மக்கள் பிழைத்துமிருக்கிறார்கள்.

இப்போது கேள்வி என்னவென்றால், **இது கிறிஸ்தவர்களின் வாழ்க்கையை எப்படி பாதித்திருக்கிறது? இப்படிப்பட்ட நேரத்தை நாம் எப்படி செலவு செய்திருக்கிறோம்?**

I. **நாம் சககிறிஸ்தவர்களோடு சேர்ந்து ஆராதிக்க முடியாமல் தடுக்கப்பட்டிருக்கிறோம்.**

ஐக்கியம் இல்லாமை உண்மையாகவே காயப்படுத்துகிறது, சபையாரோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க சகோதர சகோதரிகளோடு இணைந்து பாடல் பாட, ஜெபிக்க என்னால் காத்திருக்க முடியாது என்று சிலர் குறிப்பிடுகிறார்கள். மற்றும் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்துகிறார்கள். இச்சூழ்நிலையில் கிறிஸ்தவர்களுக்கு **குடும்ப** சபையாகக் கூடி வரும் சிலாக்கியம் கிடைத்திருக்கிறது. அது மட்டுமல்ல இரண்டு பேராவது, மூன்று பேராவாது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்று நம் கர்த்தர் சொன்ன காரியங்களை தனிப்பட்ட ரீதியில் அனுபவித்து உணர்ந்து பார்க்க ஒருவாய்ப்பு கிடைத்திருக்கிறது (மத்தேயு 18:20). மேலும், கூடுதலாகக் கிடைக்கும் விலையேறப்பெற்ற சிலாக்கியம் என்னவென்றால், இவ்விதமாக வீடுகளில் சபையாகக் கூடும்போது பெற்றோர் களுக்கும், பிள்ளைகளுக்கும் இடையே ஒரு மிகப்பெரிய ஆவிக்குரிய நெருக்கம் ஏற்படுகிறது.

சிலர் தனிப்பட்ட வீடுகளில் பத்து அல்லது பன்னிரெண்டு பேர் அடங்கிய குழுவாகப்பிரிந்து சபையாகக்கூடி வருகிறார்கள். அநேகமாக முதல் நூற்றாண்டு சபை பெரும்பாலும் வீடுகளில்தான் சபையாக கூடிவந்திருக்கிறது.இவ்விதமாக சிறு கூட்டமாகக் கூடி வரும் போது, ஆண்கள் தலைமைத்துவத் திறமைகளை வளர்த்துக் கொள்வதற்கும், சிறிய கூட்டத்தில் மிகப்பெரிய பொறுப்புகளை வகிப்பதற்கும் வாய்ப்பு ஏற்படுகிறது. பெரிய கட்டத்தில் இவ்வாய்ப்பு கிடைப்பதில்லை. பலர் கண்டு கொள்ளப்படுவதில்லை, பலர்

அவசியமற்றவர்களாகவும் போய்விடுகிறார்கள். இச்சூழ்நிலையில் பல தாய்மார்ககள் பிள்ளைகளுக்கு போதிக்கும் பொறுப்பை எடுத்துக் கொள்ளலாம். அநேகமாக, இப்பொது முடக்கத்தின் காரணமாக சபையில் ஆராதனை, போதனை, தலைமைத்துவத்தில் பெரிய அளவில் தனிப்பட்ட பங்களிப்பு உண்டாகும்.

## II. குடும்பத்தோடு செலவிட அதிக நேரம் கிடைத்திருக்கிறது.

இன்றைய அவசரமான உலகில் பெற்றோர் இருவருமே வீட்டைவிட்டு வெளியே போய் வேலை செய்யும் சூழ்நிலை இருக்கிறது. பிள்ளைகள் பள்ளிகளில் பரபரப்பாக இருக்கிறார்கள். இத்தகைய பெற்றோரும், பிள்ளைகளும் இணைந்து வீட்டில் செலவிட நேரம் மிகக் குறைவாகவே கிடைக்கிறது. கொரோனா நிலைமை தனிநபருக்கும், ஒவ்வொரு குடும்பத்துக்கும், சபைக்கும், தேசத்துக்கும், கடைசியில் ஒட்டு மொத்த உலகத்துக்கும் மிகப்பெரிய சேதத்தை ஏற்படுத்தியிருக்கிறது. குடும்பம் பலவீனமாக அல்லது பிரிந்திருக்கும்போது எல்லாமே கடைசியில் முறிந்து விடுகிறது. தேவன் ஆதாமுக்கு துணைவேண்டுமென்று கண்டபடியால்தான் ஏவாளை உண்டாக்கினார். **மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன்** என்றார் [ஆதியாகமம் 2:18]. மேலும், தேவன் கணவன், மனைவி ஒன்றிணைந்ததினால் பிறந்த குழந்தைகளுக்கு பயிற்சியும், ஒழுங்கும் அவசியம் என்று கண்டபடியால் அப்பொறுப்பை பெற்றோர்களுக்கு கொடுத்தார்: **பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்** [நீதிமொழிகள் 22:6]. **பிதாக்களே நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப் படுத்தாமல் கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்க்களாக** [எபேசியர் 6:4]. **முதிர் வயதுள்ள ஸ்திரீகளும், அப்படியே பரிசுத்தத்திற்கேற்ற விதமாய் நடக்கிறவர்களும் அவதூறு பண்ணாதவர்களும், மதுபானத்துக்கு அடிமைப்படாதவர் களுமாயிருக்கவும் தேவ வசனம் தூஷிக்கப்படாதபடிக்குப் பாலியஸ்திரீகள் தங்கள் புருஷரிடத்திலும் தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர் களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், கற்புள்ளவர்களும் வீட்டில் தரித்திருக் கிறவர்களும், நல்லவர்களும் தங்கள் புருஷருக்குக் கீழ் படிகிறவர்களுமாயிருக்கும்படி அவர் களுக்குப் படிப்பிக்கத் தக்க நற்காரியங்களைப் போதிக்கிறவர் களுமாயிருக்கவும் முதிர்வயதுள்ள ஸ்திரீகளுக்கு புத்திச் சொல்லு** [தீத்து 2:3–5].

அநேகமாக, எதிர்பாராமல் கிடைத்த நன்மைகளுள் குடும்பமாகச் சேர்ந்து செலவழிக்கும் நேரத்தின் நன்மைகளுள்

ஒன்று கணவன் – மனைவிக்கான தேவனுடைய திட்டம் மீட்டமைக்கப்பட்டு அவர்கள் முழு குடும்பமாக இன்னும் அதிக உறுதியாக தேவனுடைய திட்டத்தைப் பின்பற்றுவதாகும். இது இல்லத்திலும், உலகத்திலும் கண்டிப்பாக ஒரு வித்தியாசத்தை உண்டாக்கும் !

### III. நமக்கு தனிப்பட்ட நேரம் அதிகமாக கிடைத்திருக்கிறது.

ஒருவருக்கு அதிகமான நேரம் கிடைக்கும் போது, அதிலும் நிச்சயமாக தனிப்பட்ட கிறிஸ்தவர்களுடைய வாழ்க்கையில் அதிகமான நேரம் கிடைக்கும் போது தேவனுடைய வார்த்தையை இன்னும் ஆழமாகப் படிக்க முடியும். தனிப்பட்ட ரீதியில் நம்மை நாமே ஆராய்ந்து பார்க்க முடியும். ஜெபத்திலே அதிக நேரத்தை செலவிட முடியும். வேகமாக இயங்கிக் கொண்டிருக்கும் இவ்வுலகிலே கிறிஸ்தவர்கள் உலகக் காரியங்களில் சிக்கிக் கொள்வது என்பது எளிதான ஒன்றாகிவிடுகிறது. நாம் இப்படிப்பட்ட நேரத்தை தேவனுடைய வார்த்தை மீது கவனம் செலுத்தி செலவிடும்போது அது கடைசியாக நம் நித்திய இரட்சிப்புக்கு நம்மை வழி நடத்துகிறது. **தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும், ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக்குத்துகிறதாயும் இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது** (எபிரெயர் 4:12). மேலும், **கர்த்தர் எல்லா இருதயங்களையும் ஆராய்ந்து நினைவுகளின் தோற்றங்களையெல்லாம் அறிகிறார். நீ அவரைத் தேடினால் உனக்குத் தென்படுவார்; நீ அவரை விட்டு விட்டால் அவர் உன்னை என்றைக்கும் கைவிடுவார்** என்றும் நாம் எச்சரிக்கப்பட்டிருக்கிறோம்.

பெரும்பாலும் இவ்வுலகத்தில் சம்பவிக்கும் சம்பவங்கள் சாத்தானாலே தேவனுடைய பிள்ளைகளை பெலவீனப்படுத்துவதற்கும், இன்னும் அழிப்பதற்கும்தான் பயன்படுத்தபடுகின்றன. ஆனால், நமக்கு ஒவ்வொரு எதிர் மறையான காரியங்களையும் ஆசீர்வாதமாக மாற்றும்படியான தெரிந்து கொள்ளுதல் இருக்கிறது. நாம் இந்த பொது முடக்க காலத்தை நம் ஆவிக்குரிய குடும்பமாகிய சபையிலுள்ள ஒவ்வொருவரிடத்திலும் கிட்டிச்சேர பயன்படுத்து வோமாக. கணவன், மனைவி, பிள்ளைகள் இடையே அன்பையும், நெருக்கத்தையும் ஆழப்படுத்த பயன்படுத்து வோமாக. தேவனோடு நம் உறவில் நம்மை மூழ்கடிக்க பயன்படுத்துவோமாக. இன்று நம் உலகில் நடந்தேறும் காரியங்களிலிருந்து நித்திய நன்மை உண்டாகக்கூடும் ! ✝

# வலைகளைப் பழுது பார்ப்போம்!

Dr. **ஏபில் நாயகம்**

**உ**லகளாவிய நோய் பரவலைப் பற்றி இதற்கு முன்னர் நம்மில் பலர் கேள்விப்பட்டிருக்கவே மாட்டோம். எங்கு திரும்பினாலும் கொரோனா. செய்தித்தாள்கள். தொலைக்காட்சிகளில் வரும் நிகழ்ச்சிகள். விளம்பரங்கள் என்று அனைத்திலும் கொரோனாவைப் பற்றிய விழிப்புணர்வு செய்திகளையும், நோய் தாக்கத்தை பற்றிய செய்திகளையும் அதிகமாகக் காணமுடிகிறது. **கண்ணுக்கு தெரியாத** ஒரு கிருமி, உலகையே உலுக்கிக் கொண்டிருக்கிறது. வல்லரசு நாடுகளானாலும், வளர்ந்து வரும் நாடுகளானாலும் இந்த கிருமியினால் அனைத்து தேசங்களும் முடங்கி போய்க் கிடக்கின்றன. நாம் **இயல்பு** என்று ஏற்றுக் கொண்ட ஒரு வாழ்க்கை முறையை இந்த கிருமி நிறுத்தி வைத்துவிட்டது. அரசாங்கம் ஸ்தம்பித்திருக்கிறது. பொருளாதாரம் பாதிக்கப்பட்டிருக்கிறது. இப்படி இந்த **வைரஸ் கிருமியினால்** ஏற்பட்ட பாதிப்புக்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

பாதிப்புகள் ஒரு பக்கம் இருந்தாலும், சில நல்ல காரியங்களும் இந்த கிருமியினாலே வந்திருக்கிறது. உதாரணமாக, மாசு கட்டுப்பாட்டிற்குள் வந்திருக்கிறது. காற்று சுத்தமாயிருக்கிறது. நீர் நிலைகள் சுத்தமாயிருக்கின்றன. ஓசோன் படலத்திலிருந்த துளைகள் சீராகி வருகிறது. இப்படிப், பல வகைகளில் இயற்கை தன்னை புதுப்பித்துக்கொள்ள நேரம் கிடைத்திருக்கிறது. அதைப் போலவே, மனிதர்களாகிய நமக்கும் சில உண்மைகளை **கொரோனோ** புரிய வைத்திருக்கிறது. **இயல்பான வாழ்க்கை முறை** என்று நாம் நினைத்து ஏற்றிருந்த வாழ்க்கை முறையை **இது தேவையா** என்றும், **இதுவா இயல்பு வாழ்க்கை** என்றும் சிந்திக்க வைத்திருக்கிறது. மனிதன் சில வரம்புகளுக்கு உட்பட்டவன் என்ற உண்மையை விளங்கச் செய்திருக்கிறது. அதைவிட, நிலையற்ற வாழ்வில் எதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்ற சிந்தையை நமக்குள் விதைத்திருக்கிறது.

கிறிஸ்தவர்களுக்கு கொரோனா எதைக் கற்றுக் கொடுத்திருக்கிறது? நிச்சயமாக, தேவனோடு சஞ்சரிக்க அதிக **நேரத்தை** கொடுத்திருக்கிறது. நாம் நிலையற்றவர்கள் என்றும், இந்த பூமி நிலையற்றது என்றும் புரிய வைத்திருக்கிறது. தேவன் அனைத்தையும் தன் கட்டுப்பாட்டிற்குள் வந்திருக்கிறார் என்று நம்மை **உணரச் செய்திருக்கிறது**. எதையும் நம்முடைய

முயற்சியினால் செய்து விடலாம் என்ற எண்ணத்தை தவிடு பொடியாக்கியிருக்கிறது. நாம் அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருக்க வேண்டும் என்ற உண்மையை உறுதிபடுத்தியிருக்கிறது. இவை அனைத்தையும் கண்ணுக்குத் தெரியாத ஒரு கிருமி செய்திருக்கிறது.

I தீமோ 4:8 **சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது. தேவ பக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்கு பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது.** பிரியமானவர்களே, இந்தச் சூழ்நிலையில் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய அல்லது உணர்ந்து கொள்ள வேண்டிய உண்மை ஒன்று இருக்குமானால், அது **உலக வாழ்வு நிலையற்றது. நித்திய வாழ்வு நிலையானது** என்பது மட்டுமே. சங் 39:4 ல் **கர்த்தாவே, நான் எவ்வளவாய் நிலையற்றவன் என்று உணரும் படி என் முடிவையும் என் நாட்களின் அளவு இவ்வளவுஎன்பதையும் எனக்குத் தெரிவியும்** என்று வாசிப்பது போல் நாம் எவ்வளவு நிலையற்றவர்கள என்ற உண்மையை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். யோபு 14:5 ல் **அவனுடைய நாட்கள் இம்மாத்திரம் என்று குறிக்கப்பட்டிருக்கிறது...** அவன் கடந்து போகக் கூடாத எல்லை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்று வாசிக்கிறோம். நமக்கு முன்பாக இரண்டு வழிகள் இருக்கிறது. ஒன்று நிலையற்ற உலக வாழ்வு. மற்றொன்று, நிலையான நித்திய வாழ்வு. நாம் எந்த வழியை தேர்ந்தெடுக்கப்போகிறோம்?

கொரோனாவைப் போல இன்னொரு நோய் வரும் என்றோ வராது என்றோ சொல்ல இயலாது. ஆனால், நம்முடைய நித்தியதைத் தீர்மானிக்கப் போகிற ஒரு நாள் நிச்சயம் வரும். அந்த நாளுக்காக நாம் எப்பொழுதும் ஆயத்தமாக இருக்க வேண்டும்.

நிலையில்லாத வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிற நாம் நம் பக்தி வாழ்வின் அஸ்திபாரத்தை சரியாகப் போடவேண்டும் அந்த அஸ்திபாரம், நமக்கு வாக்குத்தத்தமாக கொடுக்கப்பட்டிருக்கிற **நித்திய ஜீவன்.** சரீரத்தில் நாம் செய்கிற எல்லா காரியங்களிலும் இந்த சிந்தை இருந்து கொண்டே இருக்க வேண்டும்.

ஏனென்றால், இப்பூமியின் வாழ்வில் நாம் சந்திக்கப்போகும் பிரச்சனைகளிலும், போராட்டங்களிலும் நம்மை நிலைநிற்கச் செய்வது நம்முடைய அஸ்திபாரம் தான். எதன் மீது நாம் கட்டப்பட்டு வருகிறோம் என்பது மிக முக்கியம். ஏனென்றால், பூமிக்குரிய வாழ்வில் நமக்கு போராட்டங்கள் உண்டு. ஆனால்,

பூலோக வாழ்வு நிலையில்லாதது என்ற எண்ணத்தை நமக்கு அளிப்பது எது? இவை அனைத்தையும் தாங்கக்கூடிய தைரியத்தைத் தருவது எது? பாடுகள் பயமுறுத்தக் கூடியவைகளாக இருந்தாலும் இவைகளைத் தாண்டி நிலையான ஓர் ஆசீர்வாதம் நமக்கு உண்டு என்று நாம் மனதார நம்புகிறோம். அந்த நம்பிக்கை தான் நமக்கு தைரியத்தைத் தருகிறது.

நாம் எதை செய்தாலும் என் நித்தியத்தை இந்த செயல் பாதிக்குமா என்று சிந்திக்க வேண்டும் . நிச்சயமாகவே, நித்தியத்தை இழக்கச் செய்யும் எந்த ஒரு காரியமும் நம் ஆன்ம வாழ்வுக்குப் பயனுள்ளதாக இருக்க முடியாது. அது எதுவாக இருந்தாலும் இது தான் உண்மை.

மீனவர்கள் கடலுக்குச் செல்ல இயலாத நேரங்களை வலைகளைப் பழுதுபார்க்கப் பயன்படுத்துவார்கள். இந்த ஊரடங்கு நாட்களில் நாமும் அப்படிப்பட்ட சூழ்நிலையில் தான் உள்ளோம். இந்நாட்களை நாம் நம் பக்தி வாழ்வைப் பழுதுபார்க்கப் பயன்படுத்துவது நல்லது. பக்திவாழ்வில் உள்ள ஓட்டைகளை அடைத்து, நித்திய வாழ்வுக்கு நம்மைத் தகுதிப்படுத்த முடியும்.

பூலோக வாழ்வின் பிரச்சனைகளும், போராட்டங்களும், தொற்று நோய்களும், நம்மைச் சோர்வுக்குள்ளாக்காமல், இவைகளை நித்திய வாழ்வுக்கான உந்து சக்திகளாக மாற்றிக் கொண்டு என்றென்றும் தேவனோடு சஞ்சரிக்கும் மக்களாக மாறுவோம்! ஆமென் !! ✝

---

### கிறிஸ்துவுக்கு வெளியே இருக்கும் மனிதனுடைய நிலை

- தேவனுடைய ஆசீர்வாதங்களுக்கு வெளியே இருக்கிறான் (எபே 1:3)
- தேவனுக்கு சத்துருவாக இருக்கிறான் (யாக்கோபு 4 : 4)
- ஜெயிக்கும் உரிமை இல்லாதவனாயிருக்கிறான் நீதிமொழிகள் 28:9
- மேலோட்டமான நிலையற்ற சந்தோஷத்தைத்தான் பெற முடியும் (எபிரெயர் 11:25)

சிறுவர் பகுதி

# நெருக்கடியான நேரங்களில் உதவுதல்

Dr. பிரெய்ஸி

ஹலோ குட்டீஸ்! நீங்கள் எல்லோரும் இந்த ஊரடங்கு காலத்தில் பாதுகாப்பாக இருப்பீர்கள் என்று நம்புகிறேன். உங்கள் எல்லோருக்காகவும் நான் ஜெபித்துக் கொண்டிருக்கிறேன். கடந்த மாதம் நாமெல்லோருமே வித்தியாசமான சூழ்நிலைகளை கடந்து வந்தோம். எனவே, இந்த மாதம் நான் உங்களுக்கு சொல்லப்போகும் காரியம் வேதாகமத்திலும், இதே விதமான ஒரு சூழ்நிலை பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்பதை பற்றித்தான்.

தேவ தாசனாகிய எலியா தீர்க்கதரிசி கடும் வறட்சியை எதிர் கொண்டபடியால் அவருக்கு ஆகாரம் இல்லாதிருந்தது. ஆனால், தேவன் எலியாவை ஒரு விதவையினிடத்தில் போய் ஆகாரம் பெற்றுக்கொள்ளும்படி கட்டளையிட்டார். [I ராஜாக்கள் 17:1-16]. இச்சம்பவத்தில், அந்த விதவையினிடத்தில் குறைவான ஆகாரம் இருந்ததையும் அது அவருடைய குடும்பத்திற்கு போதுமானதாக இல்லாதிருந்ததையும் நீங்கள் படிக்க முடியும். ஆனாலும், அவள் எலியாவின் வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்து அவருக்கு ஆகாரம் கொடுத்தாள். அப்போது எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக் கிற தேவன் அபரிதமான ஆகாரத்தால் அவளை ஆசீர்வதித்தார்.

அதேபோல் பிரியமான பிள்ளைகளே! நெருக்கடியான நேரங்களில் தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் தேவையில் இருப்பவர்களுக்கும், ஏழைகளுக்கும் உதவ வேண்டும். அப்போது பரலோகத்திலிருந்து நம் எல்லோரையும் எப்போதும் பார்த்துக் கொண்டிருக்கிற தேவன் எல்லாவற்றையும் நமக்கு அபரிதமாகத் தருவார். தேவன் தம்முடைய பிள்ளைகளை நீங்கள் யாரும் கற்பனை செய்து பார்க்க முடியாத அளவுக்கு நேசிக்கிறார். எனவே, நாம் அவருடைய பிள்ளைகளாக நன்மை செய்கிறவர். தேவையில் இருப்பவர்களுக்கு உதவி செய்து அதை மற்றவர்கள் கண்டு தேவனை ஏற்றுக் கொள்ளும்படியான ஓர் உதாரணத்தை ஏற்படுத்த வேண்டும். சரியா?

அன்புடன்
பிரெய்ஸி அக்கா! ✝

## சிறுவர்களுக்கான வேத வினா ...

### I ராஜாக்கள் 17:1-16 அதிகாரங்கள்

1. எலியாவுக்கு எந்த ஊர்?

2. தேவன் எலியாவை எங்கே ஒளிந்திருக்கும்படி கேட்டுக் கொண்டார்?

3. அந்த விதவை எங்கே இருந்தாள்?

4. விதவையினிடத்தில் என்ன ஆகாரம் இருந்தது?

5. விதவையினிடத்தில் மாவும், எண்ணெயையும் எப்போது வரை இருந்தது?

**சரியான பதில் எழுதியவர்களில் சிலர்**

| | |
|---|---|
| B. பெனிட்டா டென்னி சாரோன் | - காங்கயம் |
| K.J. ஜேஸ்பர் பிரின்ஸ் | - காங்கயம் |
| K.J. கிங்ஸ் வி ரூபஸ் | - காங்கயம் |
| J. சகாய புஷ்பராஜ் | - மணப்பாறை |
| R. எக்லிசியா | - காரைக்கால் |

## *கலாத்திய நிருபத்திலிருந்து கவனிக்கத்தக்க பாடங்கள்*

- மற்றவர்களுடைய அங்கீகாரத்திற்காக வாழவேண்டாம் (1:10)
- கடந்தகாலம் உங்கள் அடையாளமல்ல (கலாத்திய் 2:20)
- உங்கள் மதிப்பு நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருப்பத்தில்தான் இருக்கிறது. உங்கள் படிப்பிலோ அல்லது வேலையிலோ அல்ல (3:27)
- நீங்கள் இனிமேல் அடிமைகளல்ல, பிள்ளைகளாயிருக்கிறீர்கள்
- அபிப்பிராயத்தினாலோ, உணர்வுகளாலோ நடத்தப்படாமல், ஆவியினாலே நடத்தப்படுங்கள் (5:25)
- நன்மை செய்வதில் சோர்ந்துபோக வேண்டாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போம் (6:9)

# வேத வினா போட்டி

பதிலளிப்போர் கவனத்திற்கு...

கீழ்க்கண்ட கேள்விகளுக்கு வேதவசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் அடுத்த மாதம் 10 ம் தேதிக்குள் **திருமறை ஆசான்** முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன், அலைபேசி எண்ணையும் தவறாமல் எழுதி அனுப்பவும். (இதற்கான விடை மே மாத இதழில்)

## II நாளாகமம் புத்தகத்தில் தேடிக்கண்டுபிடியுங்கள் (1-10 அதிகாரங்கள்)

1. தாவீது தேவனுடைய பெட்டிக்கு எங்கே கூடாரம் போட்டார்?
2. சாலொமோன் எதின் மேல் தகன பலிகளைச் செலுத்தி பலியிட்டான்?
3. சாலொமேன் தேவனிடம் எதை விண்ணப்பமாக வைத்தார்?
4. திருவின் ராஜாவின் பெயர் என்ன?
5. தேவாலய பணிக்கு கேதுரு மரங்கள் எங்கேயிருந்து கொண்டு வரப்பட்டன?
6. தேவனுடைய ஆலயத்தை எது நிரப்பியது?
7. கர்த்தர் எப்போது சாலொமோனுக்கு தரிசனமானார் ?
8. சோபாவின் ராஜஸ்திரீ சாலொமோனைச் சோதிக்கிறதற்காக எவையெல்லாம் கொண்டு வந்தான்?
9. சாலொமோனுக்கு எத்தனை குதிரை வீரர் இருந்தார்கள்?
10. ரெகொபெயாம் என்பவன் யார்?

## மார்ச் மாத வினாக்களுக்கான விடைகள்

1. எப்ரோனிலே *(11:3)*
2. இஸ்ரவேலின் மேல் *(11:3)*
3. யோர்தான் *(12:15)*
4. கீரியாத்யாரீமுக்கடுத்தத பாலாவிலிருந்து *(13:6)*
5. தன் கையை பெட்டியண்டைக்கு நீட்டினதினிமித்தம் *(13:10)*
6. ஈராம் *(14:1)*
7. தெப்பாயிம் பள்ளத்தாக்கிலே *(14:9)*
8. கேதுரு மர வீட்டிலே *(17:1)*
9. ஆதாரேசர் *(18:5)*
10. சிமேயா *(20:7)*

## சரியான பதில் எழுதியவர்களில் சிலர்

| | | |
|---|---|---|
| M.D. ரவிச்சந்திரன் | - | சென்னை |
| மீனா ஆறுமுகம் | - | சென்னை |
| M. செல்வம் | - | கோவை |
| தே. தனம் பேன்ஸி | - | கள்ளக்குறிச்சி |
| J. ஜான்சி | - | ஆனைமலை |
| M.K. இம்மானுவேல் ராஜா | - | சென்னை |
| V.S.S. பால்ராஜ் | - | மதுரை |
| G. பாக்ய சம்பூரணம் | - | ஈரோடு |
| D. சமாதானராஜா | - | கள்ளக்குறிச்சி |
| C. அருள்ராஜ் | - | சென்னை |
| Mrs. வசந்தா செல்வராஜ் | - | கள்ளக்குறிச்சி |
| பாலாமணி | - | காங்கயம் |
| ராமசந்திரன் | - | காங்கயம் |
| செல்வமணி குணசேகரன் | - | சென்னை |

## *தொற்று நோய்களின் வரலாறு*

| | | |
|---|---|---|
| 1. | கி.மு.430 – ல் | கிரேக்க நாட்டின் அத்தேனே பட்டணத்தில் கொள்ளை நோய் **–1லட்சம் பேர் மரணம்** |
| 2. | கி.பி.165 –180 வரை | ரோம ராஜ்ஜியமத்தில் **ஆண்டோனைன்** கொள்ளை நோய் **– சுமார் 50 லட்சம் பேர் மரணம்** |
| 3. | கி.பி.250 –271 வரை | சிப்ரியன் கொள்ளை நோய் **– ரோமாபுரியில் தினந்தோறும் 5000 வரை – மரணம்** |
| 4. | கி.பி 541 –542 | ஜஸ்டினடின் கொள்ளை நோய் **– உலக மக்கள் தொகையில் 10% பேர் மரித்தனர்** |
| 5. | கி.பி 1346 –1353 | கருப்பு மரணம் **– ஆசியாவில் தொடங்கி ஐரோப்பாவின் பாதி மக்கள் தொகையை அழித்தது.** |
| 6. | 16–ம் நூற்றாண்டில் | அமெரிக்கன் கொள்ளைநோய் **– ஐரோப்பாவிலிருந்து கொண்டு வரப்பட்ட இக்கொள்ளைநோய் வட, தென் அமெரிக்க பூர்வக் குடிகளில் 90% பேரைக் கொன்றது.** |
| 7. | கி.பி. 1665 – 1666 | மகா கொள்ளைநோய் **– லண்டன் மாநகரில் 10 லட்சம் பேரைக் கொன்றது** |
| 8. | கி.பி. 1770 – 1772 | ரஷ்யா கொள்ளைநோய் **– மாஸ்கோவில் 1 லட்சம் பேரைக் கொன்றது.** |
| 9. | கி.பி. 1793 | அமெரிக்காவில் பிலடெல்பியா நகரில்மஞ்சள் காய்ச்சல் நோய் **– 5000 பேரைக் கொன்றது.** |
| 10. | கி.பி. 1889–1890 | ப்ளூ தொற்றுநோய் **– ரஷ்யாவில் ஆரம்பமாகி 5 வாரங்களில் உலக முழுவதும் பரவி 10லட்சம் பேரைக் கொன்றது.** |
| 11. | கி.பி.1916 –ல் | போலியே தொற்று நோய் **– நியூயார்க் நகரில் ஆரம்பித்து 6000 பேரைக் கொன்றது** |
| 12. | 1918–ல் | ஸ்பானிஷ் காய்ச்சல் **– உலக முழுவதும் பரவி 5 கோடிப் பேரைக் கொன்றது** |
| 13. | 1957 – ல் | ஆசியக் காய்ச்சல் தொற்றுநோய் **– 11 லட்சம் பேர் மரணம்** |
| 14. | 1968 | விநோதக் காய்ச்சல் **– உலகளவில் 10 லட்சம் பேர் மரணம்** |
| 15. | 1981 | –ம் ஆண்டு தொடங்கி இதுவரையில் 410–க்கு 3½ கோடி பேர் மரணம் |
| 16. | 2009–2010 | பன்றிக் காய்ச்சல் தொற்றுக்கு **5 லட்சம் பேர் வரை மரணம்** |
| 17. | 2014 – 2016 | எபோலா தொற்றுநோய் மேற்கு ஆப்பிரிக்காவில் **11,325 பேரைக் கொன்றது** |
| 18. | 2015 | ஷிகா வைரஸ் தொற்றுநோய் பாதிப்பு இன்று வரை கணக்கிடப்பட்டாமல் உள்ளது |

# நீர் என்னைக் காண்கிற தேவன்

Bro. K. M. *பிலிப் -பவானி*

இவ்வுலகில் வாழும் மனிதர்களுக்கு நான்கு பேர் தன்னை பார்த்துகொண்டிருக்கிறார்கள் என்பது மிகுந்த தைரியத்தையும், பாதுகாப்பு உணர்வையும் கொடுக்கிறது. ஆனால், அது நிலையானதாகயிராது; எப்பொழுதும், எங்கும், பாதுகாப்பாகவும் இருக்காது. காரணம், அவர்கள் மறைந்துபோகும் மனிதர்களேயாகும். மேலும், மனிதன் மிருகங்களைப் போல வாழாமல் கட்டுப்பாட்டுடனும், கண்ணியத்துடனும் வாழ்வதற்கு, அந்த நான்கு பேர் நம்மை பார்த்துகொண்டிருக்கிருக்கிறார்கள் என்பதும் காரணமாகும். ஒரு சில துணிகரமானவர்களுக்கு இந்த பயமும் இருக்காது. ஏனெனில், இந்த நான்கு பேர் எங்கும், எப்பொழுதும் பார்த்துக்கொண்டிருக்க முடியாது; இவர்கள் நம் தவறைச் சுட்டிக்காட்டவும், செய்யாதே என்று கடிந்துகொள்ளவும் முடியாது. காரணம் மரிக்கும் மனிதர்களாகிய இவர்களும் ஏதோ ஒரு நிலையில் தவறுகள் செய்பவர்களே என்பதே. ஆனால், எங்கும், எப்பொழுதும் எல்லாநிலையிலும் நம்மைக் கண்டித்து உணர்த்தவும், தண்டிக்கவும், திருத்தவும் வழிநடத்தவும் தகுதியுடைய ஒருவர் நம்மை எப்பொழுதும் காண்கிறார். நம்மோடு கூடவே இருக்கிறார் என்ற நல்உணர்வு நமக்கு இருக்குமானால் நாம் ஒரு போதும் பயப்படவோ, கலங்கவோ, திகைக்கவோ, சோர்ந்து போகவோ அவசியமில்லை. மேலும், எந்நிலையிலும் அவருக்கு விரோதமாகத் தவறுகளும் (பாவம்) செய்ய மாட்டோம். அவர் கண்களுக்கு நம் வாழ்க்கை பாதுகாப்பும், பராமரிப்பும், பரிசுத்த வாழ்க்கையும் பெற்று சமாதானமும், சந்தோஷமுமாய் இருக்கும்.

அவர்தான் நம்மை உண்டாக்கின **நம்மை காண்கிற தேவன்** இதோ இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குவதுமில்லை தூங்குவதுமில்லை (சங் 121:4). கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது (II நாளா 16:9). கர்த்தருடைய கண்கள் எவ்விடதிலுமிருந்து நல்லோரை நோக்கிப் பார்க்கிறது (நீதி 15:3). எதற்காக? போராட்டங்களும், பயமும், கலக்கமும், தோல்வியும், வேதனைகளும், வியாதிகளும் நிறைந்த இப்பூமியில் வாழ்ந்து கொண்டிருக்கும் தேவ பிள்ளைகளாகிய நம்மேல் தேவபார்வை இருந்து கொண்டே

இருக்கிறது என்பதே நாம் பெற்றிருக்கிற தைரியமும், நம்பிக்கையுமாகும். அன்று எகிப்தில் அடிமைகளாய் வாழ்ந்த இஸ்ரவேலர்களின் வேதனை கூக்குரலாய் தேவ சமூகத்தை எட்டியது. அவர்கள் வணங்காக் கழுத்துள்ளவர்களாயிருந்தாலும் தன்னுடைய ஜனம் என்பதாலும் முற்பிதாக்களாகிய ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களுக்கு கொடுத்த வாக்கை நினைக்கூர்ந்த தேவன் இஸ்ரவேல் புத்திரரைக் கண்ணோக்கினார் [யாத். 2:25]. அவர்களது உபத்திரவத்தைப் பார்க்கவே பார்த்தார் [யாத். 3:7]. அதுமட்டுமல்ல அவர்களைத் தன் அற்புத வல்லமையை பிரயோகித்து மோசே, ஆரோனைக் கொண்டு அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தார். ''**பாலும் தேனும் ஓடுகிற நலமும், விசாலமுமான தேசத்தில் கொண்டு போய் சேர்த்தார். அவர்களது ஒவ்வொரு தேவைகளையும் கருத்தாய் கவனித்து சந்தித்தார்; 40 ஆண்டுகளாக தன் தோளில் சுமந்தார்**'' என்று பார்க்கிறோம்.

அன்பான தேவ ஜனமே! நாம் தேவ ஜனமாயிருக்கிறபடியால் நம்மைச் சுற்றி நம்மை நெருக்குகிற, பயமுறுத்துகிற மோசமான சூழ்நிலையில் நம்மைக் காண்கிற தேவன் நம்மை விடுவிப்பது மட்டுமல்லாமல், செழிப்பான வாழ்க்கையை கொடுப்பார். **கர்த்தரை நம்புகிறவனோ செழிப்பான்** [நீதி 28:25]. ஆம், **நாம் அவருக்குள் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்** [அப் 17:28] என்பதே மிகப்பெரிய பாதுகாப்பு நம்மை அடிமைப்படுத்தி இருக்கிற பாவங்களிலிருந்து தன் ஒரே பேறான குமாரனின் தியாகத்தால் மீட்டு, பாவத்திற்கு விலகி பாதுகாப்பாய் வாழ குமாரனின் சபையில் சேர்த்திருக்கிறார். அவர் பார்வைக்கு மறைவானது ஒன்றுமில்லை[எபி:4:13] **அவர் நம்மை காண்கிற தேவன்** என்ற விசுவாசத்தோடு நமக்கு கிடைத்த விடுதலை வாழ்க்கையை சமாதானமாய், சந்தோஷமாய் வாழ்வோம்.

மேலும், **கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாயிருக்கிறதுது** [சங் 34:15]. ஏன்? எதற்காக? **தமக்கு பயந்து, தமது கிருபைக்கு காத்திருக்கிறவர்களின் ஆத்துமாக்களை மரணத்தினின்று விடுவிக்க ..... கர்த்தருடைய கண்கள் அவர்கள் மேல் நோக்கமாயிருக்கிறது.** நோவாவின் காலத்தில் வாழ்ந்த மனுஷனுடைய அக்கிரமம் பூமியில் பெருகினதால், தான் படைத்த மனிதர்களையும், உயிரினங்களையும் கூட அழித்துவிட தேவன் முடிவு செய்தார். அக்கிரமக்காரர்களை கண்ட அதே கண்கள் நீதிமானும், உத்தமனுமாகிய நோவாவைக் கண்டது. அவனுக்கு தேவ கண்களில் கிருபை கிடைத்தது. உலகமே

அழிந்தா லும் தேவ பிள்ளை நோவாவும் அவன் குடும்பமும் காக்கப் பட 120 ஆண்டுகள் தேவன் காத்திருந்தார். மிகப்பெரிய பேழையை திட்டமிட்டு உருவாகச் செய்தார். ஜலப்பிரளயம் வந்தது. பூமியில் அனைத்து மனிதர்களும் ஜீவ ஜந்துக்களும் அழிக்கப்பட்டன. ஆனால், **தமக்கு பயந்து, நீதிமானாய் வாழ்ந்து கொண்டிருந்த நோவாவின் குடும்பத்தை மரணத்திற்கு விலக்கிக் காக்க கர்த்த ருடைய கண்கள் அவர்கள் மேல் நோக்கமாய் இருந்தால்** அவர்கள் பேழைக்குள் அடைக்கலப்படுத்தப்பட்டு மரணத்தின்று விலக்கிக் காக்கப்பட்டார்கள்.

அன்பானவர்களே! உலகமே மரணபயத்தால் கலங்கி திகைத்து நின்றாலும் தேவனுக்குப் பயந்து அவருடைய கற்பனைகளின்படி நடக்கிற உத்தம மார்க்கத்தாரை எல்லா பயத்துக்கும் மரணத்திற்கும் விலக்கி காக்க தேவனுடைய கண்கள் அவர்கள் மீது நோக்கிமாயிருந்து கொண்டேயிருக்கிறது என்பதே, இக்கொடிய சூழ்நிலையில் தேவன் நமக்குக் கொடுக்கும் தைரியமும் பாதுகாப்பும் ஆகும்.

அன்பான தேவஜனமே! நன்மை செய்யும் கர்த்தருடைய கண்கள் நம்மை பார்த்துக் கொண்டிருக்கிறது என்பது எவ்வளவு தைரியமோ, சந்தோஷமோ, அதே கண்கள் மனுஷருடைய வழிகளை நோக்கியிருக்கிறது [யோபு 34 :21] கர்த்தருடைய கண்கள் எவ்விடத்திலுமிருந்து நல்லோரையும், தீயோரையும் நோக்கிப் பார்க்கிறது [நீதி 15:3] என்பதோடு, சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும், வெளியரங்கமாகவும் இருக்கியபடியால் அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்ற எச்சரிக்கையையும் நம் கருத்தில் கொள்ள வேண்டும் [எபி.4:13]. கழுதையைத் தேடிச் சென்று கொண்டிருந்த சாமானியனின் மகன் சவுல்மீது தேவனின் கண்பார்வை பட்டது. அவன் இஸ்ரவேலின் முதல் இராஜவாக பட்டம் சூட்டப்பட்டான். ஆனால், சவுலோ தேவனுடைய பார்வைக்கு பொல்லாப்பானதை செய்தான் [I சாமு 15:19] I சாமுவேல் 15 – ஆம் அதிகாரத்தில் தீர்க்கதரசி சாமுவேல் மூலம் தேவன் சொன்ன வார்த்தையின்படி அமலேக்கியர் மீது படையெடுத்து வெற்றி பெற்றான். ஆனால், தேவன் சொன்னபடி இராஜா முதற்கொண்டு எல்லா மனிதர், மிருக ஜீவன்களையும் அழித்துப்போட மனதில்லாமல், இராஜாவையும் முதல்தரம் இரண்டாந்தரம் நலமானது மானவைகளைத் தப்பவைத்து அற்பமான சகல வஸ்துகளையும் அழித்துப்போட்டான். சாமுவேல் நேரில் வந்தபோது எல்லாவற்றையும் மறைத்து மாய்மாலம் செய்கிறான். கர்த்தருடைய கண்கள் மனுபுத்திரரைப் பார்க்கிறது

அவருடைய இமைகள் அவர்களை சோதித்தறிகிறது. [சங் 11:4] மனுஷருடை வழிகள் கர்த்தரின் கண்களுக்கு முன்பாக இருக்கிறது. அவருடைய வழிகள் எல்லாவற்றையும் சீர்தூக்கிப் பார்க்கிறார் [நீதி 5:21] என்பதை முற்றிலும் மறந்து தேவபார்வையை அசட்டை செய்தான். இருதயத்தைப் பார்க்கிற தேவனுடைய கண்களுக்கு முன் மீறுதலை மறைக்க முடியுமா? தான் செய்த மீறுதல்களை சவுல் மறைக்க முயன்றான். அப்பொழுது சாமுவேல் சவுலை நோக்கி ; நீர் கர்த்தருடைய வார்த்தையை புறக்கணித்த படியினாலே அவர் உன்னை இராஜாவாய் இராதபடி புறக்கணித்தார். [I சாமு 15:23] என்ற சாபத்தை சவுல் பெற்றான். தேவனுடைய கண்களின் பார்வையிலிருப்பதை பாதுகாப்பும் உயர்வுமாய் கருதாமல் அசட்டை செய்தபடியால் சவுல் இராஜவாழ்க்கையை பறிகொடுத்து சாபத்துக்கு ஆளானான்.

தெய்வ பயத்துக்குரியவர்களே! இன்றும் இவ்வுலகில் அற்பர்களும், நீசர்களும் தூசிகளுமாயிருந்த நம்மீது தேவனுடைய கண்பார்வை பட்டதால், அவருடைய பிள்ளைகளாக உயர்த்தப்பட்டிருக்கிறோம். நம்மை இராஜரீக ஆசாரியக் கூட்டமாக ஆசீர்வதித்திருக்கிறார். மட்டுமல்ல தொடந்து நம் மேல் அவர் கண்களை வைத்து வேதத்திலிருந்து ஆலோசனை சொல்லி நித்தமும் நம்மை நடத்துகிறார். [சங் 132:8] நாம் உற்சாகப்படுவோம். கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்போம். ஜீவனுள்ள தேவனாகிய நீர் [என்னை] எங்களைக் காண்கிற தேவனாய் இருப்பதால் நாம் பலப்படுவோம் பரவசமடைவோம்; கர்த்தருக்குள் தைரியமாய் இருப்போம். ✝

---

**நாம் ஒன்றுக்கும் கவலைப்படாமல் தேவனிடம் நம் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கன மிகச்சிறந்த காரணங்களுள் ஒன்று நாம் வாழ்நாள் முழுவதும் முயற்சி செய்தும் முடிக்காமல் இருக்கும் காரியங்களை நாம் முழங்காலில் நிற்பதால் தேவன் சில நிமிடங்களில் முடித்துவிடுகிறார்.**

# தேவன் எல்லாவற்றையும் தம்முடைய கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்

பென்னிமார்ட்டின்

அருமையான திருமறை ஆசான் வாசகர்களே! உங்கள் யாவரையும் இக்கட்டுரையின் வாயிலாக சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். மண்ணுலகை தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து, விண்ணுலகையும் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரத்துடிக்கும் மனிதனை கண்ணுக்குத்தெரியாத கிருமி ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கிறது. சீனாவைப் பூர்வீகமாகக் கொண்ட இந்த கொடூர கொரோனா வைரஸ் பல நாடுகளுக்குப் புலம் பெயர்ந்து உலகெங்கும் வலம் வந்து கொண்டிருக்கிறது. கிட்டத்தட்ட ஒட்டுமொத்த உலகத்தையும் தொட்டுப் பார்த்துவிட்ட இந்த கிருமியைக் கட்டுப்படுத்த வழிதெரியாமல் மனித இனம் விழிபிதுங்கி நிற்கிறது.

பொதுவாக, இவ்வுலகில் ஏதாவது ஒரு விஷயம் மிகவேகமாக பரவுகிறதென்றால் அதை வைரலாகி வருகிறதென்று விளையாட்டாகச் சொல்வார்கள். அது உண்மைதான் என்று உலகிற்கு உரக்கச் சொல்லியிருக்கிறது கிரீட உருவம் கொண்ட இந்தக் கிருமி. ஒருவிதத்தில் பார்த்தால் இந்த கிருமி இவ்வுலகில் ஏழை, பணக்காரர், ஜாதிமத பேதங்கள் ஒன்றுமில்லை, எல்லோரும் ஒன்றுதான் என்ற சமத்துவத்தை சமத்தாக கற்றுக்கொடுத்திருப்பதுபோல் தெரிகிறது. அகிலத்தில் அரங்கேறிவரும் அன்றாட நிகழ்வுகளை அடிப்படையாக வைத்து இதுதான் உலகத்தின் முடிவு என்று பல ஆவிக்குரிய ஆசாமிகள் ஆருடம் கூறி அசத்தி வருகிறார்கள்.

இந்த கொரோனா வைரஸின் வருகைக்குப்பிறகு இவ்வுலகமே மாறிவிட்டது. கொரோனாவுக்கு முன், கொரோனாவுக்குப் பின் என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. பலருடைய வாழ்க்கையைப் பார்க்கும்போது மனிதநேயம் மறுபடியும் மலர்ந்துவிட்டதுபோல் மனதில் தோன்றுகிறது. அதே நேரத்தில் சிலருடைய வாழ்க்கையில் மனிதநேயம் மரத்துவிட்டதையும், மரித்துவிட்டதையும் காண முடிகிறது. இவ்வுலகில் நித்தமும் நிகழும் நிகழ்வுகளை நம் நினைவில் நிறுத்திப்பார்க்கும்போது பலருடைய மனதில் எழும் கேள்வி இவ்வுலககை யார் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார் ?

என்பதாயிருக்கிறது. இவ்வுலகில் தேவனுடைய இசைவின்றி ஓர் அணுவும் அசையாது எனும் மறுக்க முடியாத உண்மையை மனித இனம் மனதில் கொள்ள வேண்டுமென்பது நம் வேண்டுதலாயிருக்கிறது. ஆம், நம் தேவன் எல்லாவற்றையும் ஆட்சி செய்து எல்லாவற்றையும் தம்முடைய கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார் (I நாளாகமம் 29 : 11,16).

இப்போது நம் தேவன் எல்லாவற்றையும் தம்முடைய கட்டுப்பாட்டில் வைத்திருப்பதால் ஏற்படும் பயன்களை படிப்படியாக பார்ப்போம்.

**I. தேவன் எல்லாவற்றையும் தம்முடைய கட்டுப்பாட்டில் வைத்திருப்பதால் என் வாழ்க்கைக்காகவும் அவர் ஒரு திட்டத்தை வைத்திருக்கிறார்.**

நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்கு கொடுக்கும்படிக்கு நான் உங்கள் பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே (எரேமியா 29 : 11).

இவ்வுலகில் பெரும்பாலான மக்கள் தங்கள் வாழ்க்கைக்கென பல திட்டங்களைத் தீட்டி மனம்போன போக்கில் வாழ்ந்து மடிந்து போகிறார்கள். இது உலகத்தின் மக்களுக்கு சரி. ஆனால், கிறிஸ்தவர்களுக்கு சரியாகாது. கிறிஸ்தவர்களாக நாம் நம் வாழ்க்கைக்கான தேவசித்தம் என்ன என்பதை கண்டறிய வேண்டும். ஆனால், காரியங்கள் எப்போதும் இப்படியாக இருப்பதில்லை. பெரும்பாலான கிறிஸ்தவர்கள் தேவன் என்று ஒருவர் தங்கள் வாழ்க்கையில் இல்லாதது போல தாங்களாகவே வாழ்க்கைக்கான திட்டத்தைத் தீட்டி வாழ்ந்துவருகிறார்கள். மனுஷனுடைய இருதயத்தின் எண்ணங்கள் அநேகம்; ஆனாலும் கர்த்தருடைய யோசனையே நிலைநிற்கும் ( நீதிமொழிகள் 19 : 21 ). மனிதனுடைய இருதயம் எண்ணங்களின் இருக்கையாயிருக்கிறது. இந்த இருதயத்தில்தான் எத்தனை வண்ணமயமான எண்ணங்கள் ! இந்த இருதயத்திலிருந்துதான் நன்மையான எண்ணங்களும் தோன்றுகின்றன, தீமையான எண்ணங்களும் தோன்றுகின்றன. இந்த இருதயம் எல்லாவற்றைப் பார்க்கிலும் திருக்குள்ளதும், மகா கேடுள்ளதுமாயிருக்கிறது என்று வேதம் சொல்கிறது. நாம் வாழ்க்கையில் குடும்பத்திற்காக, வருங்காலத்திற்காகத் திட்டங்களை வகுப்பதில் தவறில்லை. ஆனால், நம் இருதயத்தில்

தேவனை மையமாக வைத்து திட்டங்களை வகுக்க வேண்டும். சிலர் தாங்களாகவே திட்டமிட்டு தங்கள் பின்புலத்தினாலும், பணபலத்தினாலும் காரியங்களை சாதிக்க நினைத்து பெரும் தோல்வியைத் தழுவி அகலப்பாதாளத்தில் விழுந்த பிறகு தேவன் தங்களை கைவிட்டுவிட்டதாக அவர் மீது பழிபோடுகிறார்கள். இவர்களை என்னென்று சொல்வது?

## II. **தேவன் எல்லாவற்றையும் தம்முடைய கட்டுப்பாட்டில் வைத்திருப்பதால் என் வாழ்க்கைக்காக அவர் நோக்கத்தை வைத்திருக்கிறார்.**

தீமை செய்ய நினைத்தீர்கள்; தேவனோ இப்பொழுது நடந்து வருகிறபடியே வெகு ஜனங்களை உயிரோடே காக்கும் படிக்கு அதை நன்மையாக முடியப் பண்ணினார் (ஆதியாகமம் 50:20).

அன்றியும் அவருடைய தீர்மானத்தின் படி அழைக்கப் பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம் (ரோமர் 8:28).

மேற்சொல்லப்பட்ட இரு வசனங்களும் நம் வாழ்க்கைக்கான தேவனுடைய நோக்கத்தை விவரமாக விளக்குகின்றன. நம்முடைய வாழ்க்கையில் எதுவும் எதேச்சையாக நடப்பதில்லை. எல்லாமே ஒரு நோக்கத்தோடு தான் நடக்கின்றன. நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கைக்கும் ஓர் அர்த்தம் உண்டு. சிலர் வாழ்க்கையின் அர்த்தத்தை கல்வியிலும், பணத்திலும், புகழிலும் தேடுகிறார்கள். உண்மையில், வாழ்க்கையின் அர்த்தத்தை மேற்சொல்லப்பட்ட காரியங்களில் கண்டுபிடிக்க முடியாது. தேவனுக்குப் பயந்து அவருடைய கற்பனைகளைக் கைக் கொள்வதே, அவருடைய சித்தத்தை செய்வதே நம் வாழ்க்கையின் அர்த்தமாயிருக்கிறது. கிறிஸ்தவர்களாகிய நாம் பெரும்பாலும் நம் வாழ்க்கையில் சகலமும் சம்ரிதியாக நடந்தேறும் போது தேவன் நல்லவர் வல்லவர் என்று வாயார வாழ்த்துகிறோம். ஆனால், துன்பம் நம்மை துவம்சம் செய்யும் போது துவண்டுபோய் எனக்கு மட்டும் ஏன் இப்படி நடக்கிறது? தேவனை அறியாதவர்களும், தேவனுடைய காரியங்களில் அக்கறை இல்லாதவர்களும் கூட நன்றாய் இருக்கிறார்களே! தேவனுடைய அன்பும், அக்கறையும், அரவணைப்பும் எங்கே என்று தேவனை நோக்கி கேள்விக்கணைகளைத் தொடுக்கிறோம். ஆவிக்குரிய காரியங்களில் ஆவலுள்ளவர்களாகிய நாம் அப்படி யிருக்கலாகாது.. நம் வாழ்க்கையில் என்ன நடந்தாலும் அது

மோசமானதாக இருந்தாலும் கூட அதையும் தேவன் நன்மையாக மாற்றித்தருவார் என்று விசுவாசத்தோடு நாட்களை நகர்த்த வேண்டும். தேவனுடைய வல்லமை நம் வாழ்க்கையில் வெளிப்பட பிரச்சனைகளை ஒரு வாய்ப்பாக நாம் பார்த்தால் தேவப்பிரசன்னத்தை நாம் உணர முடியும். நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கைக்காகவும் தேவன் ஒரு நோக்கத்தை வைத்திருக்கிறார் என்பதற்கு மிகச் சிறந்த உதாரணமாக யோசேப்பின் சம்பவத்தை எடுத்துக் கொள்ளலாம். யோசேப்பின் சகோதரர்கள் யோசேப்பை தவறாக நடத்தினார்கள், வெறுத்தார்கள், விற்றுப்போட்டார்கள், பார்வோனின் மனைவியால் தவறாகக் குற்றஞ்சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். அவருடைய வாழ்க்கையில் எல்லாம் தீமையாகவே நடந்து கொண்டிருந்தன. ஆனால் அவைகளின் மத்தயிலும் தேவன் கிரியை செய்துகொண்டுதான் இருந்தார். இறுதியில் எல்லாம் நன்மையாகவே முடிந்ததென்று உறுதியாக நம்மால் பார்க்க முடியும். இவைகளை மனதில் கொண்டு தான் யோசோப்பு தன் சகோதர்களிடம் நீங்கள் எனக்குத்தீமை செய்ய நினைத்தீர்கள், தேவனோ அதை நன்மையாக முடியப்பண்ணினார் என்று சொல்கிறார்.

பிரியமான தேவ பிள்ளைகளே! இவ்வுலகில் எதுவும் கட்டுக் கடங்காமல் நடக்கவில்லை, நடந்து கொண்டிருக்கிறவைகள் கடந்து போகும், முடிந்துபோகும். வீடுகளில் அடைந்து கொண்டிருக்கும் நாம் ஆவிக்குரிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோமா? ஊரடங்கின் ஊடே ஊடகத்தின் வாயிலாக நம் விசுவாசத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கி றோமா? வேத வாசிப்பிலும், ஜெபத்திலும் அதிக நேரத்தை செலவிடுகிறோமா? நம் ஆவிக்குரிய வாழ்வை சற்று உற்று நோக்குவோம். நம் தேவன் எல்லாவற்றையும் தம்முடைய கட்டுபாட்டில் தான் வைத்திருக்கிறார். அவருக்கு இசைவான வாழ்க்கையை நாம் அமைத்துக் கொள்ளும் போது வளமான வாழ்க்கையை நாம் வசமாக்கிக் கொள்ளலாம். ✝

**நேரம் என்பது நித்தியத்தின் இடைவேளை அல்ல. ஏனென்றால், நேரத்திற்கு கால அளவு நூறுகோடி வருடங்களாக இருந்தாலும், அது முடிவே இல்லாத கரையை உடைய பரந்த கடலில் ஒரு சிறு கூழாங்கல்லாகத்தான் இருக்கும்.**

# சுத்தம் எதிலே தேவை?

Bro. **பாண்டியன்**

**ஆ**ண்டவர் இயேசுவின் நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துதலும், சமாதானமும் உண்டாவதாக. இன்றைய சூழலில் சரீரத்தைப்பற்றி அரசாங்கமும், சுகாதாரத் துறையும் வலியுறுத்திக் கூறி வருகிறதை நாம் காண்கிறோம். தேவனுடைய வார்த்தை நம்மை எவைகளில் சுத்தமாயிருக்கச் சொல்கிறது என்பதைப் பற்றி நாம் அவசியம் தெரிந்து வைத்திருக்க வேண்டும். கொரோனா வியாதி காரணமாக நம் கைகளை அடிக்கடி சோப்புப் போட்டு தண்ணீரால் சுத்தம் பண்ண வேண்டும். ஆனால், வேதம் சொல்வதைக் கவனியுங்கள். யார் கர்த்தருடைய பர்வதத்தில் ஏறுவான்? யார் அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் நிலைத்திருப்பான்? கைகளில் சுத்தமுள்ளவனும் இருதயத்தில் மாசில்லாதவனுமாயிருந்து தன் ஆத்துமாவை மாயைக்கு ஒப்புக் கொடாமலும், கபடாய் ஆணையிடாமலும் இருக்கிறவனே என்று. அவன் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவன் [சங் 24:3–5].

ஆக, உலகம் உடல் சுத்தத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கையில் வேதம் ஆத்தும சுத்தத்தை வலியுறுத்துகிறது. கைகள் குற்றமற்றவர்களின் ரத்தத்தினால் அசுத்தமடைகிறது. [ஏசா 1:15]. மேலும், மனுஷருடைய கைகள் லஞ்சத்தினால் அசுத்தமடைகிறது. [ஏசா 33:15,16]. இவைகளைக் கழுவி சுத்திகரி [எரே 4:14]. ஆணையிடுதலைப் பற்றி கூறும்போது உத்தமன் ஆணையிட்டதில் நஷ்டம் வந்தாலும் தவறாதிருக்கிறான். சங் 15:4], ஆகவே, பொய்யாணையிடாமல் உள்ளதை உள்ளதென்றும் இல்லதை இல்லதென்றும் நாம் பேசிப் பழக நமதாண்டவர் கட்டளையிட்டிருப்பதை நாம் நினைவுகூர வேண்டும். [சங் 18:20] தேவன் என் கைகளின் சுத்தத்திற்குத் தக்கதாக எனக்குச் சரிக்கட்டினார் என்று தாவீது சொல்வது நிச்சயம் சோப்பு போட்டு கழுவுதல் பற்றி அல்ல என்பதை நாம் அறிவோம்.

**இரண்டாவதாக,** நம் வாழ்க்கைப் பாதை சுத்தமாயிருக்க வேண்டும். வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக் கொள்ளுகிறதினால் தானே. [சங் 119:9]. உலகப்படிப்பு நல்லொழுக்கத்தைக் கற்றுத் தருவதில்லை. தேவனுடைய வசனமே ஒருவனை நல்வழிப் படுத்தும். நான் உங்களுக்கு சொன்ன உபதேசத்தினாலே நீங்கள்

இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள் என்று தம் சீஷரை பார்த்து இயேசு சொன்னார். கிறிஸ்து சபையில் அன்புகூர்ந்து திருவசனத்தைக் கொண்டு சுத்திகரித்தார் [எபே 5:26]. உம்முடைய வசனமாகிய சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கும் என்றும் ஜெபித்தார்[யோவா 17:17]. அப்படி சுத்தமாகும் போது தான். நாம் ஒருவரில் ஒருவர் அன்பு கூர முடியும் பேதுரு [1பேது 1:22].

மூன்றாவதாக, மனசாட்சியில் சுத்தம் தேவை. விசுவாசத்தின் இரகசியத்தை சுத்த மனசாட்சியிலே காத்துக்கொள்கிறவர்களாய் இருக்க வேண்டும் [I தீமோ 3:9]. தவறு செய்யும் அநேகர் என் மனசாட்சிக்கு விரோதமில்லாமல் செய்தேன் என்று சொல்வதை நாம் கேட்டிருக்கிறோம். ஆனால், வேதம் மாத்திரமே மனசாட்சியிலும் கூட அசுத்தம் இருக்கமுடியும் என்று சுட்டிக்காட்டுகிறது. விசுவாசம் தேவவசனத்தைக் கேள்விப்படுவதால் வருகிறது. ஆனால், கள்ள உபதேசம் அவர்கள் மனசாட்சியை அசுத்தப்படுத்துகிறது. நீ விசுவாசமும் நல்மனசாட்சியும் உடையவனாயிரு என்று புத்தி சொன்ன பவுல், தொடர்ந்து இந்த நல் மனசாட்சியை சிலர் தள்ளி விட்டு விசுவாசமாகிய கப்பலை சேதப்படுத்தினார்கள் [I தீமோ 1:19] என்கிறார். ஆகவே துர்மனசாட்சி நீங்க தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாய் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடு தேவனிடம் சேரக்கடவோம் [எபி 10:22] சுத்த மனதோடே சுவிசேஷம் அறிவிக்கவும் [பிலி.1:16]. சுத்த மனதோடே காணிக்கை செலுத்தவும் நாம் பணிக்கப்பட்டுள்ளோம் [I நாளா 29:17].

**நான்காவது** நம் பக்தியிலும் சுத்தம் தேவைப்படுகிறதாக யாக்கோபு கூறுகிறார். நாவடக்கம் இல்லா தேவ பக்தி வீணாபயிருக்கும், தியகற்ற பிள்ளைகளுக்கும் விதவைகளுக்கும் உதவிசெய்து, உலகத்தால் கறைபடாத படி தன்னைக் காத்துக் கொள்வது தான் சுத்தமான பக்தி என்கிறார்[யாக் 1:26,27] அன்பை வலியுறுத்தும் அப்போஸ்தலன் யோவான் இதைப்பற்றி சொல்லும் போது, இவ்வுலக ஆஸ்தியுடையவன் சகோதரனுடைய குறைச்சலில் உதவி செய்யாவிட்டால் அவனுக்குள் தேவ அன்பு இல்லை என்கிறார். [1யோவா 3:17] . இல்லாதவர்களுக்கு செய்த உதவி எனக்கே செய்ததற்கு சமம் என்று நமதாண்டவர் கூறியுள்ளார். அத்தோடு, பொல்லாத, விபச்சார சந்ததியார் நிறைந்த இவ்வுலகில் நம்மைக் கறைப்படாமல் காத்துக் கொள்ள வேண்டும். உலக சிநேகிதம் தேவனுக்கு பகையாகும் [யாக் 4:4].

**ஐந்தாவதாக**, ஜெபத்திலும் சுத்தம் இருப்பதாக வேதம் சொல்கிறது [யோபு 16:17]. ஆனால், சிலர் ஜெபிக்கும் போது அவர்களை அழியும், கொன்றுபோடும் என்றெல்லாம் ஜெபிக்கிறார்கள். நமதாண்டவர், சத்துருக்களை சிநேகிக்கவும், சபிக்கிறவர்களை ஆசீர்வதிக்க, பகைவர்க்கு நன்மை செய்யமற்றும் நீதியினிமித்தம் துன்பப்படுபவர்களுக்காக ஜெபம் பண்ணுங்கள் என்கிறார். அன்றியும் பரிசுத்தமா கைகளை உயர்த்தி எல்லா இடங்களிலும் ஜெபம் பண்ண விரும்புகிறேன் என்கிறார் பவுல் [1 தீமோ 2:8] விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளை பெறுவீர்கள் என்கிறார். நமதாண்டவர். ஆகவே, பிறரின் தேவைக்காகவும் நம் தேசத் திற்காக, ஆளுகிறவர்களுக்காக ஜெபிக்க மறவாதிருப்போம்.

இறுதியாக, நம் கர்த்தர் இயேசு இருதயத்தில் சுத்த முள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் தேவனை தரிசிப்பார்கள் என்கிறார். சோப்பு போட்டு கைகளை கழுவி சுத்தம் செய்வதை விட இருதய சுத்தம் அவசியம். ஏனெனில், மனுஷரின் இருதய நினைவுகள் ஆரம்பம் முதலே பொல்லாதது.[ஆதி 6:5] அதைக் கழுவி சுத்திகரிக்க வேண்டும். [எரே 4:14] நம் தேவனிடம் ஜெபிக்க வேண்டும். சங் 51:10 தேவன் விசுவாசத்தினாலே புறஜாதியராகிய நம் இருதயங்களை சுத்தப்படுத்தியுள்ளார் [அப் 15:9]. அதைக் காத் துக் கொள்வோம். தேவக்கிருபை நம் அனைவரோடுங்கூட இருப் பதாக ஆமென்.

✝

---

## நாளும் நடப்பும்

**கொரோனா வைரஸ் காரணமாக தேசிய மக்கள் தொகை பதிவு பணிகள் அனைத்தும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.**

**கொரோனா கொள்ளை நோய் உலகப்பொருளாதாரத்தில் முன்பெப் போதும் இல்லற அளவில் மிக்ப்பெரிய மாதிப்பை ஏற்படுத்திவிட்டது.**

**இந்தியாவில் பல கல்வி நிறுவனங்கள் இணையாயிலாக கல்வி கற்பித்து வருகின்றன.**

**உலக அளவில் 2:75 லட்சம் மக்களின் உயிரைப் பறித்திருக்கிறது இந்த கொரூர கொரோனா.**

**பெருந்தொற்று எதிரொலியால் உலகில் விளையாட்டுப் பொருட்கள் எதுவும் நடைபெறவில்லை.**